

GOKULAM
கோகுலம்
ஜூன் 2005
ரூ.6/-
போலார்
எக்ஸ்பிரஸ்

சுறாக்களிடம் மாட்டிக்
கொள்ளாமல் மீன்
பவளப் பாறையை அடைய
உதவுங்கள் ப்ளீஸ்!



கோகுலம்

(கல்கி நிறுவன வெளியீடு)

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்
லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு
சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

முதன்மை உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22251522 / 22250623

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :

ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : **24 யுஎஸ். டாலர்**
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்





ஜூன் 2005 ❖ மலர் : 23 ❖ இதழ் : 5

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்



* டோனி பிளேர்

தினசரி வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பவர்கள், சிடு சிடுவென இருப்பவர்களை விட ஆரோக்கிய மாக வாழ்கிறார் கள் என லண் டன் பல்கலைக் கழக ஆய்வு தெரிவிக்கிறது. மகிழ்ச்சியாக இருப்பவர்களின் இதயம் நல்ல முறையில் இயங்கு கிறது. மேலும் சர்க்கரை போன்ற நோய்கள் வருவதற் கான வாய்ப்புகளும் பெரு மளவில் குறைகிறது என் கிறார்கள்.

சிரிப்பே மருந்து!



* போப்

புதிய போப்

போப்பாண்டவர் இரண் டாவது ஜான்பால் மறைவுக்குப் பிறகு அப் பதவிக்கு போப் பாண்டவர் 16-வது பென டிக்ட் தேர்ந்தெடுக்கப்பட் டார். அவருக்கு வயது 78. 265வது போப்பாண்டவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார்.

நீர் மூலம் பரவும் நோய்கள்...

நீர்மூலம் பரவும் நோய் களால் வளரும் நாடுகளில் ஆண்டுதோறும் 50 லட்சம் பேர் இறக்கின்றனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

இந்தியர்களுக்குக் கிராக்கி!

உலக அளவில் விவசா யத்தில் பட்டம் பெற்ற இந் தியர்களுக்கு தேவை எழுந்துள்ளது. இஸ் ரேலியர்களுக்கு 5,000 டாலர் மாதச் சம்பளமும் டச்சுக் காரர்களுக்கு 8,000 டாலரும் கொடுக்க வேண்டி யுள்ளது. ஆனால் இந்தியர் களுக்கு 2,000 டாலர் கொடுத் தாலே போதும் என்பதால், வளர்ந்த நாடுகளில் இந்தியர் களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ள விரும்புகின்றனர்.

மூன்றாவது முறையாக...

பிரிட்டனில் நடைபெற்ற தேர்தலில் அதிபர் டோனி பிளேர் மூன்றாவது முறையாக வெற்றி பெற்றிருக்கிறார்.

''தலைவருக்கு தலை வீங்கி யிருக்கே, ஏன்?''

''திடீர்னு ஆட்சி கவிழ்ந்ததுல கீழே விழுந்து அடிபட்டுடுச்சாம்!''

- சி. தனசேகரன், எட்டாம் வகுப்பு, அழகிரி சுரேஷ் அ.உ.நி.பள்ளி, ஆலாங்கொம்பு



பரிசு ஜோக்ஸ்

கண் நல்லா தெரியுமா?



''காரெட் சாப்பிட்டா கண் நல்லா தெரியும்டா''


''எப்படி சொல்றே?''

''பின்னே முயல் எங்கேயாச்சும் கண்ணாடி போட்டுப் பார்த்திருக் கியா?''

- ஆர்.எஸ். பிரபு



- எம்.எம். ரேகா, நல்லூர்



அதில் என்ன

பெருமாள் என்ற மேதாவி இருந்தான். அவன் ஓர் அழகிய கிளியை வளர்த்து அதற்கு "அதில் என்ன சந்தேகம்?" என்ற ஒரு வார்த்தையைப் பேசக் கற்றுக் கொடுத்தான்.

வீட்டுத் தோட்டத்தில் ஓர் இடத்தில் நூறு பொன்னைப் புதைத்து வைத்து, "இங்கே தோண்டினால் புதையல் கிடைக்குமா?" என்று கேட்டான். அதற்குக் கிளி, "அதிலென்ன சந்தேகம்?" என்று சொன்னது.

இந்த ஒரு கேள்வியையே கேட்டுப் பழகி இருந்த கிளி வேறெந்தக் கேள்விக்கும் பதில் சொல்வதில்லை! பணத்தை எவருமறியாமல் வெவ்வேறு இடங்களில் புதைத்து விட்டு பலரறிய இந்தக் கேள்வியைக் கேட்பான் பெருமாள்.

"பெருமாளின் கிளி புதையல் ரகசியத்தைச் சொல்லும்; அதுவும் அவனுக்கு மட்டுமே சொல்லும்" என்று ஊரில் செய்தி பரவியது.


ஒரு நாள் ஒரு பேராசைக்காரன் வந்தான். "பெருமாளு! நான் கேட்டாலும் புதையல் இடத்தைச் சொல்லும்படி மந்திரம் போடேன். அப்புறம் நான் கிளியை விலைக்கு வாங்கிக் கொள்கிறேன்" என்றான் அவன்.

''நான் கிளியை விற்பதாகச் சொல்லவேயில்லையே'' என்றான் பெருமாள்.

''ஆயிரம் வராகன் தந்தாலுமா?'' என்று கேட்டான் பேராசைக்காரன். சிறிது யோசித்தபின், ''சரி, நானும் காசிக்கு என் அண்ணனுடன் போய் விடலாமென்றிருக்கிறேன். ஒரு வாரம் வந்து பழகிக் கொள்'' என்றான் பெருமாள்.

பேராசைக்காரன் கிளிக்கு தினமும் பழங்கள் கொடுத்து நட்பாக்கிக் கொண்டான். அதன் பிறகு அவன் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அது ''அதிலென்ன சந்தேகம்?'' என்று கேட்டது.

சந்தேகம்?



அந்த இடத்தைத் தோண்டினால் புதையல் இருந்தது.

''இதோ பார்! கிளியை ரொம்பத் தொந்தரவு பண்ணாதே! வாரம் ஒரு தடவை புதுப்புது இடத்துக்கு அழைத்துக் கொண்டு போய் கேள்'' என்று சொல்லி ஆயிரம் வராகன்களோடு கம்பி நீட்டினான் பெருமாள்.

கிளியைப் புதிய இடங்களுக்குக் கூட்டிச் சென்று கேள்வியைக் கேட்க, கிளியும் தயங்காமல், ''அதிலென்ன சந்தேகம்?'' என்றது. தோண்டிப் பார்த்தால் ஒன்றுமில்லை! நான் ஒரு பைத்தியக்கார முட்டாள்'' என்று தலையிலடித்துக் கொண்டான் அவன்.

''அதிலென்ன சந்தேகம்?'' என்றது கிளி!

பெருமாள் தன் மனைவியோடு தீர்த்த யாத்திரை புறப்

யார் அந்தப் பிரபலம்?



ஒரே வருடத்தில் 35 திரைப்படங்களில் நடித்து சாதனை செய்தவர்.

பட்டான். ஒரு காட்டு வழியில் திருடர்கள் பதுங்கியிருப்பதைக் கண்டான். மனைவியிடம், ''சொன்னால் கேட்டால் தானே! வைரஹாரம் ரொம்ப ராசியானது. போட்டுக் கொண்டு புறப்பட்டால் விஷ ஜந்துகள் கண்ணில் தென்படாது என்றேன். இதோ பார் நட்டுவாக்களி'' என்று கையிலிருந்த கம்பால் சருகுகளை அடித்தான்.

கணவர் காரணமில்லாமல் எதுவும் சொல்ல மாட்டார் என்பதால் பெருமாளின் மனைவி பயந்தது போல் நடித்தாள்.

''சரி வா, அதைப் போட்டுக் கொண்டு வந்து விடலாம்'' எனத் திரும்பி நடந்தான் பெருமாள்.

திருடர்கள் ''இன்று நமக்கு சரியான வேட்டை! வைரஹாரத்தை விடுவானேன்?' என்று பேசாதிருந்தனர்.

பெருமாள் ஊருக்குள் போய் ஆட்களுடன் வர திருடர்கள் பிடிபட்டனர்.

பெருமாளின் எஜமானர் ஒரு திருமால் பக்தர். பெருமாள் தவறு செய்யும் போதெல்லாம், ''பெருமாள் மடையா, பெருமாள் முட்டாள்'' என்று திட்டி விட்டு நாக்கைக் கடித்துக் கொள்வார்.

ஒரு தடவை ''பெருமாள்! உன் பெயரை மாற்றி வைத்துக் கொண்டு வந்தால்தான் உனக்கு வேலை'' என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார்.

''சரிங்க முதலாளி. எங்க குலவழக்கப்படி பத்துக் கலம் நெல் தானம் கொடுத்தால்தான் பேரு மாத்த முடியும். அதுக்கு நான் எங்கே போவேன்?'' என்றான் பெருமாள்.

''தொலைகிறது. நானே தரேன்'' என்றார் எஜமானர்.

''ஆனா ஒரு நிபந்தனை'' என்றான் பெருமாள்.

''என்ன நிபந்தனை?'' என்று கேட்டர்.

''மறுபடி பேர் மாற்றச் சொல்லக்கூடாது. வேலையிலிருந்து விலக்கக் கூடாது'' என்றான் பெருமாள். எஜமானர் ஒப்புக் கொண்டார். ஒருவாரம் கழித்துப் பெருமாள் திரும்பி வந்தான்.

''இப்போ உன் பெயரென்ன?'' என்று ஆவலுடன் கேட்டார் முதலாளி.

''பெத்த பெருமாள்.''

இதைக் கேட்டதும் முதலாளி மூர்ச்சையானார்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி



சிறுவர் இலக்கியம் செழிக்கத் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்ட அழ. வள்ளியப்பா, கோகுலத்தின் முதல் கௌரவ ஆசிரியர். அவர் நினைவாக இந்த ஆண்டும் போட்டி அறிவிப்பதில் கோகுலம் பெருமை கொள்கிறது.

1. இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 உட்பட) மட்டுமே கலந்து கொள்ளலாம்.
2. கதைகள் சிறுவர்களுக்கானதாக இருக்க வேண்டும். நகைச்சுவை, துப்பறிதல், சமூகம், வரலாறு, அறிவியல் என எதைப் பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். சொந்தக் கற்பனை என்ற உறுதி மொழியுடன் அனுப்ப வேண்டும்.
3. வெள்ளைத் தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதலாம்.
4. பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை ஒட்டிய உறையை கதையுடனேயே இணைக்க வேண்டும். இது குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. இதில் கலந்து கொள்ள கட்டணம் ஏதும் இல்லை. ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
6. கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்திற்கே உண்டு. பிறகு இதன் உரிமை முழுவதும் ஆசிரியருக்கே.
7. முடிவு தேதி 31.5.2005. இதற்குப் பின் வருபவை பரிசீலனைக்கு ஏற்கப்படமாட்டா.
8. அயல்நாட்டில் உள்ளவர்கள், இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியைக் கட்டாயம் தர வேண்டும்.
9. கதைகளை 'ஆசிரியர், கோகுலம், 47, N.P. ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். உறையின் மேல்

   'அழ. வள்ளியப்பா நினைவு கதைப் போட்டி' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.
10. போட்டி குறித்து எழும் எவ்விதப் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் எடுக்கும் தீர்ப்பே முடிவானது.

முதல் பரிசு - ரூ. 500/-
இரண்டாம் பரிசு - ரூ. 300/-
மூன்றாம் பரிசு - ரூ. 200/-

போலார் எக்ஸ்பிரஸ்

சான்டா கிளாஸ் பெயரில் தனது பெற்றோர்தான் பரிசுப் பொருட்களை ஒவ்வொரு கிறிஸ்துமஸ் அன்றும் வைக்கிறார்கள் என நினைக்கிறான் சிறுவன் ஒருவன். பனிப் பொழியும் கிறிஸ்துமஸ் நாள் இரவு, தனது காதைத் தீட்டிக் கொண்டு பரிசுப் பொருளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

நள்ளிரவுக்கு ஐந்து நிமிடம் இருக்கும்போது வித்தியாசமான சத்தம் கேட்கிறது. உடனே கண்ணாடி ஜன்னலில் படிந்திருக்கும் பனியைத் துடைத்தபடி வெளியில் பார்க்கிறான் சிறுவன்.

ஒரு கறுப்பு நிற மேஜிக் ரயில் புகையைக் கக்கியபடி அவன் வீட்டு வாசலுக்கு வந்து நிற்கிறது.

இரவு நேர உடை மற்றும் காலில் செருப்புடன் வெளியே வருகிறான் சிறுவன். ரயிலில் உள்ள கண்டக்டர் ''நீ வருகிறாயா?'' என்று கேட்கிறார்.

''எங்கே?'' என்று சிறுவன் வியப்புடன் கேட்க, ''வட துருவத்துக்கு... இது போலார் எக்ஸ்பிரஸ்'' என்று பதில் அளிக்கிறார்.














அவனும் தலையாட்ட, ''டிக்கெட் இருக்கிறதா?'' என்று கேட்கிறார். சிறுவன் இல்லை என தலையாட்டிய படியே, பாக்கெட்டினுள் கைவிட டிக்கெட் இருக்கிறது. உடனே அவனை ரயிலுக்குள் இழுத்துச் செல்கிறார் கண்டக்டர்.









ரயிலில் ஒரு சிறுவன் பரிதாபமாக அமர்ந்திருக்கிறான். அவனுடன் பேச முயல்கிறான் சிறுவன். அப்போது கண்டக்டர் ''டிக்கெட் இருப்பவர்கள் மட்டுமே இந்த கம்பார்ட்மெண்ட்க்குள் நுழைய முடியும். அவனிடம் டிக்கெட்

இல்லை. நீ மட்டும் வா'' என்று அழைத்துச் செல்கிறார். உள்ளே இவனைப் போன்று நிறைய சிறுவர்கள் இருக்கின்றனர்.

ரயில் பனி நிறைந்த வட துருவத்தில் பயணிக்கிறது. இடையில் ஒரு பெண்ணின் டிக்கெட் தொலைந்து விட, அவளுக்குத் தண்டனை அளிக்கப் படுகிறது. பலவித சாகசங்கள், மந்திர தந்திர காட்சிகளுக்குப் பின் ரயில் சான்டா கிளாஸ் இருக்கும் இடத்தை அடைகிறது. அங்கு இவர்களுக்காக ஸ்பெஷல் பரிசுக்குவியல்கள் காத்திருக்கின்றன.

சான்டா கிளாஸ் தனக்கு யாரை மிகவும் பிடிக்குமோ அவருக்கு முதல் பரிசுப் பொருளை வழங்குவார். அப்படி முதல் பரிசு, கதாநாயகச் சிறுவனுக்கு வழங்கப் படுகிறது. அந்தப் பெட்டிக்குள் அழகிய மணி இருக்கிறது. சிறுவன் அந்த மணியைத் தொலைத்து விட்டுத் தேட, உண்மையான நம்பிக்கை இருந்தால் மணி திரும்பக் கிடைக்கும் என்கின்றனர்.

சிறுவனுக்கு அதுவரை இருந்த சந்தேகங்கள் விலக, முழு நம்பிக்கையுடன் பிரார்த்திக்க, மணி திரும்பக் கிடைக்கிறது. மீண்டும் எல்லாச் சிறுவர்களும் பரிசுப் பொருட்களுடன் போலார் எக்ஸ்பிரஸ் மூலம் அவரவர் வீட்டை அடைகின்றனர்.

இந்தப் படம் முழுவதும் அனிமேட்டட் கதாபாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிரபல ஹாலிவுட் நடிகர் டாம் ஹாங்ஸ் மூன்று கதாபாததிரங்களுக்கு குரல் கொடுத்து இருக்கிறார். ராபர்ட் ஜெம்கிஸ் டைரக்ஷனில் வார்னர் பிரதர்ஸ் இந்தப் படத்தைத் தயாரித்து இருக்கிறது.

விடுமுறை நேரத்தில் வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் இந்தப் படம் நிச்சயம் சிறுவர்களைச் சந்தோஷமடையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை!

கோகுலம் சுழல் கோப்பை!



ஓர் ஆண்டில் கோகுலம் இதழ்களில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்கு சுழல் கோப்பை வழங்கப்பட்டு வருகிறது. இப்பொழுதே முயற்சி செய்தால் உங்கள் பள்ளியும் சுழல் கோப்பையைப் பெற முடியும். உடனே நீங்களும் உங்கள் நண்பர்களும் படைப்புகளை அனுப்பி வையுங்கள். கோப்பையை வெல்லுங்கள்!

சாதனை காலிஸ்!



* காலிஸ்

மேற்கிந்தியத் தீவுகள் - தென் ஆப்பிரிக்காவுக்கு இடையில் நான்கு டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றன. முன்னிலையில் இருந்த தென் ஆப்பிரிக்கா நான்காவது போட்டியை கோப்பை வெல்லும் உறுதியுடன் களம் இறங்கியது. இப்போட்டியில் இரு அணிகளும் மாறி மாறி சதம் அடித்தன. ஒரு போட்டியில் 8 சதங்கள் என்பது புதிய சாதனை!



* லாரா

தென் ஆப்பிரிக்காவின் ஸ்மித், டிவில்லியர்ஸ், காலிஸ், பிரின்ஸ் ஆகியோர் சதமடித்தனர். மேற்கிந்தியத் தீவுகளில் கெய்ல், சர்வான், சந்தர்பால், பிராவோ ஆகியோர் சதமடித்தனர். இதன் மூலம் 7 சதம் அடித்த முந்தைய சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. 1938ல் ஆஸ்திரேலியா - இங்கிலாந்து, 1955ல் மேற்கிந்தியத் தீவுகள் - ஆஸ்திரேலியா, 2004ல் தென் ஆப்பிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள் ஆகியவற்றில் இரு அணிகளும் சேர்த்து 7 சதங்கள் அடித்துள்ளன.

இந்தப் போட்டியில் தென் ஆப்பிரிக்காவின் ஜாக் காலிஸ் 147 ரன்களைக் குவித்தார். இதன் மூலம் தென் ஆப்பிரிக்க அணியில் அதிக ரன்களைக் குவித்தவர், அதிகப்பட்ச ரன்களை அடித்தவர் ஆகிய சிறப்புகளைப் பெற்றார் காலிஸ்.

இதுவரை காரி கிரிஸ்டன் எடுத்த 21 சதங்களே அதிகபட்ச சாதனையாக இருந்து வந்தது. 22 சதங்களை அடித்து காலிஸ் அதை முறியடித்திருக்கிறார். இந்த ஆண்டு ஐசிசி பட்டியலிலும் லாராவை முந்திவிட்டார் காலிஸ்.

அக்பரின் கனவு!

அமைப்பு: சஹானா ஷெட்டி, அமர்நாத் படம் : பிள்ளை





என்ன உளறுகிறீர்கள்? ஒரு பொன்கூட தர மாட்டேன். வெளியேறுங்கள் முதலில்...
அப்பொழுது பீர்பால் வந்தார்.
பீர்பால், என் கனவுக்கு பலன் சொல்லு...
இந்த முட்டாள்கள் எனக்கு முன்னால் என் உறவினர்கள் இறந்து விடுவார்கள் என்கின்றனர்!
உங்கள் கனவு விசேஷமானது. நீங்கள் நீண்ட காலம் வாழ்ந்து, உங்கள் உறவினர்களை வழி நடத்திச் செல் வீர்கள்!
ஆஹா! இந்தப் பொன்முடிப்பைப் பெற்றுக் கொள்.

தோல்வியால் கேலி!

அன்புள்ள டாக்டருக்கு,

நான் இந்த வருடம் ஒன்பதாம் வகுப்பில் தோல்வி அடைந்துவிட்டேன். என் நண்பர்கள் பலரும் கேலி செய்கிறார்கள். எனக்குப் பள்ளிக்குப் போகவே பிடிக்கவில்லை. வீட்டில் நீ எதற்குமே லாயக்கில்லை என்று திட்டுகிறார்கள். அடுத்து என்ன செய்வது என்பதும் புரியவில்லை. எனக்கு நல்ல ஆலோசனைகளை வழங்க வேண்டுகிறேன்.

- தி. குமாரவேல்,
திருத்துறைப்பூண்டி.

வாழ்க்கையில் நம் ஒவ்வொருவருக்கும் பள்ளிப் படிப்பு



என்பது ஒரு முக்கியமான பருவம். ஆனால் இன்றைய கல்வி முறையானது மதிப்பெண்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிப்பதாக அமைந்திருப்பதால் உன்னைப் போன்று தேர்வுகளில் குறைந்த மதிப்பெண் பெற்று தோல்வி அடைந்தவர்கள் மனச்சோர்வுக்கு ஆளாகிறார்கள். இந்தச் சோர்வு தேவையில்லை. பள்ளிப் படிப்பு மட்டுமே வாழ்க்கை இல்லை. அதையும் தாண்டி சாதிக்க வேண்டியது நிறைய உள்ளது.

இன்று உலகில் புகழ் பெற்று விளங்கும் மனிதர்களில் பலர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டுத் தங்களுக்கு விருப்பமான துறைகளில் முழுமையாக ஈடுபட்டு முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக கம்ப்யூட்டர் தொழில்துறையில் உலகிலேயே முதலிடம் பெற்றுவரும் பில் கேட்ஸ் பள்ளிப்படிப்பை முடிக்கவில்லை. என்றாலும் வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். தன்னுடைய விடாமுயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் இன்று அவர் பெயரைச் சொன்னாலே எவரும் தெரிந்து கொள்ளுமளவிற்கு முன்னேறியிருக்கிறார். அது போல் நீயும் உன்னிடம் உள்ள தனித்திறமைகளை வளர்த்துக் கொள்.

எடுத்துக்காட்டாக, ஓவியம் வரைவதில் ஈடுபாடு இருந்தால் தமிழகத்தில் இன்னொரு 'ஜெயராஜ்' ஆக உருவாகலாம். கிரிக்கெட்டில் ஆர்வமிருந்தால் டெண்டுல்கர் ஆகலாம். பாடுவதில் விருப்பமிருந்தால்

எஸ்.பி.பி. ஆகலாம். ஏன், கார் ஓட்டும் திறமை இருந்தால் நரேன் கார்த்திகேயன் ஆகலாம். இப்படி ஏதாவது சாதனை நிகழ்த்துவதை உன் வாழ்க்கையில் குறிக்கோளாகக் கொள். குறிக்கோளை அடைவதற்கு உன் முழு உழைப்பையும் கொடு. அப்போதுதான் வாழ்க்கையில் வெற்றி பெற முடியும்.

அதே நேரத்தில் எந்த ஒரு புது முயற்சியிலும் ஆரம்பத்திலேயே வெற்றி கிட்டும்



டாக்டர் கு.கணேசன்

என்று உறுதி கூற முடியாது. பள்ளிப் படிப்பில் நீ கண்டது போல் இனி ஏற்கப் போகும் துறைகளிலும் தோல்விகள் குறுக்கிடலாம். அப்போது அந்தத் தோல்விகளையும் நீ பெரிதாக்கிப் பார்க்கக் கூடாது. உலகம் அறிந்த ஓர் அதிபர் தன்னுடைய 21 வயதில் வியாபாரத்தில் தோல்வி அடைந்தார். 22 வயதில் சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடைந்தார். 27 வயதில் உடல் நிலை பாதித்தது. 34 வயதில் அரசியல் தலைவர் தேர்தலில் தோல்வி அடைந்தார். 47 வயதில் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் தோல்வியடைந்தார். இறுதியில் தன் 52 வயதில் அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார். தம்முடைய தோல்விகளையே வெற்றிப்படிகளாக மாற்றிக் காண்பித்தவர் உலகம் போற்றும் ஆப்ரகாம் லிங்கன். இவர் தன்னுடைய முதல் தோல்வியிலேயே துவண்டிருந்தால் அமெரிக்க அதிபராக ஆகியிருக்க முடியுமா? ஆகையால் தோல்விகளைக் கண்டு அச்சப்படாமல் இனி நீ நம்பிக்கையுடனும் ஊக்கமுடனும் உறுதியுடனும் செயல் படு. நீ பள்ளிப் படிப்பைத் தொடர்வதாக இருந்தாலும் சரி, வேறு துறைகளைத் தேர்ந்தெடுத்தாலும் சரி, உனக்கு வெற்றி நிச்சயம்!



சக்தியை நமக்காக மட்டுமின்றி உலகத்துக்காக சேமிப்போம்!

நீங்கள் உண்மையிலேயே சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்துகிறீர்களா என்பதை அறிய ஒரு சிறிய டெஸ்ட்.

1. அறையை விட்டு சிறிது நேரம் மட்டும் வெளியில் சென்றாலும் மின் விளக்கை அணைக்காமல் செல்கிறீர்களா? ____________

2. வீட்டில் ஓர் அறையில் நீங்கள் இருந்தாலும் அனைத்து விளக்குகளையும் எரிய விடுகிறீர்களா? ____________

3. பல் தேய்க்கும்போதும் பாத்திரம் கழுவும்போதும் குழாயைத் திறந்து வைக்கிறீர்களா? ____________

4. நீண்ட நேரம் குளிக்கிறீர்களா? ____________

5. வெயில் நேரத்திலும் சுடு தண்ணீரில் குளிக்கிறீர்களா? ____________

6. கேட்காத, பார்க்காத போதும் வானொலி, தொலைக்காட்சி பெட்டிகளை இயங்கும் நிலையில் வைக்கிறீர்களா? ____________

7. குளிர் சாதனப் பெட்டியை அடிக்கடி திறந்து, மெதுவாக மூடுகிறீர்களா? ____________

8. ஹீட்டரைப் போட்டுவிட்டு ஸ்விட்சை அணைக்க மறந்து விடுகிறீர்களா? ____________

9. 'நாம் இதற்குப் பணம் கட்டுவதில்லை' என்று நினைத்து பொது இடங்களில் சக்தியை வீணாக்குகிறீர்களா? ____________

10. சக்தியை வீணாக்குவதால் உங்கள் குடும்பத்துக்கு மட்டுமின்றி, நாட்டுக்கும் நஷ்டம் என்பதை மறந்து செயல்படுகிறீர்களா? ____________

'இல்லை' என்ற பதிலுக்கு ஒவ்வொரு மதிப்பெண் போடுங்கள்.

மதிப்பெண் 8-10: சக்தியை வீட்டுக்கும் நாட்டுக்கும் சிக்கனமாக செலவழிப்பவர். சபாஷ்!

5-7: எச்சரிக்கை! கவனம் தேவை.

2-4: சக்தியையும் பணத்தையும் வீணாக்குகிறீர்கள். நீங்கள் வீணாக்கும் சக்தி மற்றவர்களுக்குப் பயன்படலாம்.



உலகிலேயே மதிப்பு மிக்க ஒரு பூ உண்டென்றால் அது காஷ்மீர் பள்ளத்தாக்கில் பயிராகும் 'ஞாழல் பூ'தான்! குங்குமப் பூவிற்குத்தான் தமிழ் இலக்கியங்களில் 'ஞாழல் பூ' என்ற சிறப்புப் பெயர் உள்ளது.

- சு. இலக்குமணசுவாமி, மதுரை

ஞாழல் பூ!



Ant-lion எனப்படுவது சிங்கம் அல்ல. அது பூச்சியினத்தைச் சேர்ந்த தட்டான்.

Jelly fish எனப்படுவது மீன் அல்ல. குடை வடிவிலான, ஒளி ஊடுருவக் கூடிய scyphozoa வகுப்பைச் சேர்ந்த குழியுடலி.

- மா. கண்ணன், இராஜபாளையம்

திபெத் நாட்டில் விருந்தாளிகள் ஒருவரது வீட்டில் தங்கி விடை பெற்றுச் செல்லும்போது, வீட்டுக்கு உரியவர் தம் நாக்கை வெளியே நீட்டிக் காட்டுவார். இதற்குப் பொருள்: "நீங்கள் இங்கிருந்தபோது உங்கள் பேச்சை நான் ரசித்தேன்!"

- ஆர். அம்பிகா, மதுரை





இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்லாத உயிரினம் - கடற்பஞ்சு.

ஆற்றில் பிறந்து கடலில் வாழும் மீன் - சாலமன்.

உலகின் முதல் கணக்கு எந்திரம் - அபாக்கஸ்.

- இ.நந்தினி, ஆறாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி




- உலகில் 9000க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் உள்ளன.
- 'அல்பேட்ராஸ்' என்னும் பறவை இரண்டு வருடங்களுக்கு ஒரு முட்டைதான் இடும்.
- பறவைகளிலும் விஷத்தன்மை உடைய பறவையினம் இருக்கிறது. நியூ கினியாவில் காணப்படும் பிட் ஓய் என்ற பறவையின் தோல், இறகு, உள்ளுறுப்புகள் அனைத்தும் விஷத்தன்மை கொண்டவை!


- பு.யூனுஸ் சாரிக், மதுரை

ராணுவத்தில் பயன்படுத்தப்படும் பீரங்கி வண்டிகளை 'டாங்க்'குகள் என்று அழைக்கிறோம். 1915-ல் பிரிட்டிஷ்காரர்களால் கண்டுபிடிக்கப்பட்ட 'டாங்க்' என்கிற இந்தப் போர்க் கருவி பற்றிய விபரங்கள் மிகவும் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டன. இதைப் பற்றிய விபரங்கள் எதிரிகள் தெரிந்து கொள்ளக் கூடாதே என்பதற்காக, யாராவது கேட்டால் சஹாரா பாலைவனத்திலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளுக்குத் தண்ணீர் கொண்டு போவதற்காகக் கட்டப்பட்ட வண்டி என்று சொல்லும்படியாக எல்லாருக்கும் உத்தரவிடப்பட்டிருந்தது. அதன்படி 'டாங்க்' என்று அதனை அழைத்தனர். அந்தப் பெயரே இன்றும் நிலைத்து விட்டது.

- இரா.பிரசன்னா, கரூர்

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்:

1. கண்ணகியின் கணவன் (4)
7. துள்ளி ஓடும் புள்ளி___ (2)
4. மூன்றாவது கனி (2)
8. எடுத்த காரியத்தில் ___ அடைய வேண்டும் (3)
10. முல்லைக்கு இதைக் கொடுத்தான் பாரி (2)
12. தண்ணீரை இதில் பிடித்து வைப்போம் (2)
13. துவரை, கடலை என்பது __ வகை (4)

வலமிருந்து இடம்:

1. வாத்து வகையைச் சேர்ந்த பெரிய உயிரினம் (4)
3. கல்கத்தா என்றதும் இந்தத் தெய்வம் நினைவுக்கு வரும் (2)
5. ___ வைக்கும் இடத்தில் பூ வைக்க வேண்டும் என்பது பழமொழி (2)
9. இல்லை என்பதற்கு எதிர்ச் சொல் (2)
11. நீர் தேக்கி வைக்கும் இடம் (2)
14. பர்மாவின் தலைநகர் (4)

மேலிருந்து கீழ்:

1. கோகுலத்தில் குழல் ஊதுபவன் (4)
2. மூத்த சகோதரன் (4)
6. ஐம்பூதங்களில் ஒன்று (3)
11. வில்லிலிருந்து எய்யப்படுவது (3)
12. யானையை அடக்குபவர் (3)

கீழிருந்து மேல்:

3. பச்சையம் இல்லா தாவரம் (3)
4. ஏழு நாட்கள் என்பது ஒரு ___ (3)
13. காற்றாடி என்பதை இப்படியும் சொல்லலாம் (4)
14. அழிப்பான் ஆங்கிலத்தில்___ (4)

- வி. ராதா, தஞ்சை

விடை 67ஆம் பக்கம்

பிள்ளையாரின் பசி!

மிதிலையில் ஜனகர் ஆட்சி செய்யும்போது ஒருநாள் ராஜசபைக்கு நாரதர் வந்தார். அவரை உபசரிக்காமல் அலட்சியமாக இருந்தார் ஜனகர்.

நாரதர் ''ராஜரிஷி என்று போற்றப்படும் நீயா இப்படி இருக்கிறாய்?'' என வியந்தார்.

''மகரிஷி! நான் வேறு, தெய்வம் வேறு என்று நினைப்பதே இல்லை. ஒவ்வொரு உயிரிலும் கடவுள் அணுவாகக் கலந்திருக்



கிறார் என்று புராணங்கள் சொல்கின்றன. தெய்வம் தன்னையே பூஜிக்குமா? அது தற்பெருமை ஆகாதா?'' என பதிலுரைத்தார் ஜனகர்.

நாரதர் பேசாமல் திரும்பி விட்டார். நேரே விநாயகரிடம் சென்று ''ஜனகருக்கு பகவான் வேறு, பக்தர் வேறு என்று புரிய வைக்க வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்.

விநாயகர் ஒரு வேதியனாக உருமாறி அரண்மனைக்கு வந்தார்.

காவலர் விரைந்து சென்று, ''மன்னா! ஓர் அந்தணர் யாசிக்கிறார்'' என்றார்.

''அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார் ஜனகர்.

எதிரே நின்ற கணபதியைப் பார்த்து, ''நீங்கள் விரும்புவதென்ன?'' என்று விசாரித்தார்.

''வயிறு நிறைய உணவு'' என்றார் கணபதி.

''யாரங்கே! இந்த அந்தணர் போதும் போதுமென்கிற அளவு உணவிட்டு அனுப்புங்கள்'' என்று கட்டளையிட்டார்



வேந்தர்.

தலை வாழை இலை போட்டு பருப்பு, பச்சடி, பாயசம், பொரியல், வறுவல், கூட்டு என்று பரிமாற, ஒன்றைப் போட்டு விட்டு உள்ளே போய் அடுத்ததை எடுத்து வருவதற்குள் இலை காலியாகியிருந்தது.

''சமைத்ததெல்லாம் காலி'' என்று கொற்றவனிடம் கூறினர்.

ஜனகருக்கு இது ஏதோ தெய்வ சோதனை என்று பட்டது.

ஊர் மக்கள் தாங்கள் சமைத்ததை அரண்மனை அதிதிக்குப் படைக்கும்படி முரசறையச் சொன்னார்.

விதவிதமான உணவு வகைகள் வந்தன. அவை இலையில் விழும் வேகத்தை விட வேதியர் வயிற்றுள் விரைந்து விழுந்தன.

''ஸ்வாமி! இது பசி மாதிரித் தெரியவில்லை.



'தி கோல்ட் ரஷ்', 'ஸிடி லைட்ஸ்' ஆகியவை இவரது தலைசிறந்த திரைப்படங்களில் சில.

ஏதோ நோய் போல் தெரிகிறது. என்னால் முடிந்தது இவ்வளவுதான்'' என்றார் அரசர்.

''துளி ஆகாரத்தைக் கொடுத்து பசியைக் கிளப்பி விட்டு விட்டாய்! அந்தப் பகவானால் இந்தப் பகவானின் பசியைத் தீர்க்க முடியாமல் ஊரிலிருக்கும் பகவான்களின் உதவியை வேறு நாடியிருக்கிறாய்!'' என்று கேலியாகச் சொல்லியபடி எழுந்து போனார்.

ஜனகரின் தலை அவமானத்தால் கவிழ்ந்தது.

அதே ஊரில் திரிசரன் என்ற ஏழை அந்தணன் தன் மனைவி விரோசனையுடன் வாழ்ந்து வந்தான். அவன் தினமும் விக்னேஸ்வரரை பூஜிக்காமல் சாப்பிட மாட்டான்.

அவன் வீட்டுக்குச் சென்றார் விநாயகர்.

''ஸ்வாமி! இன்று ஊரிலுள்ளோர் அரண்மனை விருந்தாளிக்குச் சாப்பாடு எடுத்துச் சென்று விட்டதால் எங்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை'' என்று கண்ணீர் மல்கக் கூறினாள் விரோசனை.

'' விநாயகரை அருகம் புல்லால் பூஜிக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். ஓர் அருகம்புல் கொண்டு வாருங்கள்'' என்றார் கணேசர்.

பக்தியோடு பூஜித்த

அருகம்புல்லை ஒரு தட்டில் வைத்து நீட்டினாள். அதை வாயில் போட்டு மென்று விழுங்கினார் கணபதி.

அதேநேரம் விரோசனையின் சமையலறையில் மளிகை சாமான்கள் நிரம்பி வழிந்தன. தானியக் கிடங்குகள் நிரம்பியிருப்பதாக பணியாளர்கள் வந்து ஜனகரிடம் தெரிவித்தனர். ஊரிலுள்ளோர் கொண்டு வந்த உணவுக்கேற்ப அவரவர் இல்லத்தில் தானியங்கள் நிரம்பின.

ஜனகர் வேதியர் போன வழியை விசாரித்துக் கொண்டு மந்திரி பிரதானிகளுடன் வந்தார். வந்தவருக்குக் கணேச தரிசனம் கிடைத்தது. ஜனகரின் அகந்தை அப்போதே அழிந்தது. விநாயகர் அனைவரையும் வாழ்த்தி மறைந்தார்.


''அருகம்புல்லுக்கு இத்தனை மகிமையா?'' என்று கேட்டார் அரசர். திரிசரன் சொல்ல ஆரம்பித்தான்:

''யமதர்மனின் புத்திரன் அனலாசுரன். தேவர்கள் விநாயகரிடம் முறையிட அவர் அசுரனை விழுங்கிவிட்டார். வயிற்றுள் போன அனலன் வெப்பத்தை வெளிப்படுத்தினான்.

''அதனால் உலகமே உஷ்ணத்தால் தவித்தது. பயிர் பச்சைகள் கருகின. விநாயகர் குளிர்ந்தாலே உலகம் குளிரும் என்பதை உணர்ந்த மகரிஷிகள் குடம் குடமாய் பன்னீரும், இளநீரும் கொண்டு பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்தனர். சந்தனத்தை அரைத்து அப்பினர். அமிர்த கலசத்தைக் கொணர்ந்து தும்பிக்கையில் கொடுத்தனர். வருணன் பனிக்கட்டிகளைப் பொழிந்தான். தாமரைப் பூக்களால் அர்ச்சித்தனர். சந்திரன் தன் கதிர்களைப் பாய்ச்சினான். ஆதிசேஷன் உடம்பைச் சுற்றிக் கொண்டான். எதனாலும் உஷ்ணம் தணியவில்லை.

அப்போது 88,000 ரிஷிகளும் தலைக்கு 21 அருகம்புற்கள் பறித்து வந்து அர்ச்சித்தனர். விநாயகரின் தேகத்திலிருந்து வியர்வை பெருகுவது நின்று காற்று குளிர்ச்சியாயிற்று.

அது முதல் அருகம்புல் அர்ச்சனை பிள்ளையாருக்கு விசேஷமாகி விட்டது'' என்று முடித்தான் திரிசரன்.



''ஏங்க இங்க 2E வருமா?''

''மருந்தடிச்சிருக்கு. வராதுங்க...''

- ஆர்.எஸ். பிரபு





கத்தரிக்கோல் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

● எம். வினோத்,
சங்கரன்கோவில்

? ஜக்கு, கோடை விடுமுறையைக் கழிக்க உங்கள் ஊருக்கு வரலாமா? சென்னை எப்படி இருக்கிறது?

சென்னை பொதுவாக எல்லோரையும் ஈர்க்கக் கூடிய நகரம். நீங்கள் தாராளமாக வரலாம். (என்ன, அப்பாவின் பர்ஸ்தான் இளைத்துப் போகும்!) வெயிலைத்தான் கொஞ்சம் பொறுத்துக் கொள்ள வேண்டும் வினோத்!

● டி. முருகேசன்,
திருவாரூர்

? மிருகங்களுக்கு இரவில் கண் தெரிவது போல மனிதர்களுக்கு ஏன் கண் தெரிவதில்லை?

இரவில் உணவு தேடும் உயிரினங்கள், பகலில் உணவு தேடும் உயிரினங்கள் என இயற்கையில் உயிரினங்கள் படைக்கப்பட்டுள்ளன. பகலில் ஓய்வெடுத்து இரவில் உணவு தேடும் உயிரினங்களுக்கு பார்வைத் திறன் அதிகமாக இருந்தால்தான் தங்களுக்குத் தேவையான உணவைப் பெற்றுக் கொள்ள முடியும். மனிதன் பகலில் உழைத்து, இரவில் தூங்கக் கூடியவன். எனவே இரவில் அந்த அளவுக்கு கண் தெரிய வேண்டிய அவசியமில்லையே முருகேசன்!

● ஆர். ராஜி,
திருவண்ணாமலை

? பல்லி நாக்கை நீட்டினால் பூச்சிகள் எப்படி





ஒட்டிக் கொள்கின்றன ஜக்கு?

பூச்சிகளை உணவாக உட்கொள்ளும் எல்லா பிராணிகளுக்குமே நாக்கு பசைத் தன்மை கொண்டதாக அமைந்திருக்கிறது. தவளை, பச்சோந்தி போன்றவற்றைக் கவனித்துப் பார்த்தால் தெரியும் ராஜி.

● எம். சுபைதா பேகம், காரைக்கால்

? கத்தரிக்கோல் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது ஜக்கு?

கத்தரிக்கோல் 3500 ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியிருக்கலாம் என்கிறார்கள். சீனா அல்லது பிரிட்டனின் கண்டுபிடிப்பாக இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 1761 ஆம் ஆண்டுக்குப் பின்பே பொதுவாக எல்லோரும் கத்தரிக்



கோலைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தான் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலால் ஆன கத்தரிக்கோல்கள் தயாரிக்கப்பட்டன.

● எஸ். லூர்துராஜ், அவிநாசி

? தேனீயின் கூடு எதால் கட்டப்படுகிறது ஜக்கு?

வேலைக்காரத் தேனீக்கள் தங்கள் உடலில் சுரக்கின்ற ஒரு வகை மெழுகுப் போன்ற பொருளையும் உமிழ் நீரையும் கொண்டு ஒரு கூட்டினை உருவாக்குகின்றன. இக் கூடு அறுங்கோண வடிவில் தனித் தன்மை கொண்டதாக விளங்குகிறது லூர்துராஜ்.

கடனைக் கொடு!

அம்பேத்கர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது தமது நெருங்கிய நண்பர் ஒருவருக்குக் பணம் கடனாகக் கொடுத்திருந்தார்.

அதன் காரணமாக கடன் வாங்கியவர் சம அந்தஸ்துடன் அம்பேத்கருடன் பேச முடியாமல் சங்கடப்பட்டார். அம்பேத்கர் சொல்வதை யெல்லாம் ஆமோதித்துக் கொண்டு இருந்தார். இதைக் கண்டு அம்பேத்கர் ஆத்திரமடைந்தார்.

''என் கருத்து தவறு எனில் மறுத்துப்பேசு, இல்லாவிட்டால் கடன் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடு!'' என்றார்.

- ஆர்.பிரசன்னா, கரூர்



* மூன்றாம் ஜார்ஜ்

* சூசன் பி. அன்டனி



கிராமத்தார் நேசித்தால் போதுமா?

தகுதி என்ன?

19ம் நூற்றாண்டு துவக்கத்தில் அமெரிக்காவில் அடிமை ஒழிப்பு, மது ஒழிப்பு, பெண்களுக்குச் சம உரிமை ஆகியவற்றுக்குப் போராடியவர் சூசன் பி.அன்டனி. அவர் திருமணமே செய்து கொள்ளாமல் இருந்தார். அக்கால கட்டத்தில் அமெரிக்காவில் அடிமை ஒழிப்பு இயக்கத்தில் தீவிரமாக செயல்பட்டு வந்த சாமுவேல் ஒருமுறை அன்டனியைச் சந்திக்க நேரிட்டது. ''நீங்கள் திருமணமாகாதவர். பெண்களின் திருமணத்தைப் பற்றிப் பேச உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?'' என்று சாமுவேல் கேட்டார். அதற்கு அன்டனி, ''சாமுவேல், நீங்கள் ஓர் அடிமை அல்ல. எனவே அடிமை ஒழிப்பு பற்றி பேச உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது?'' என்று வினவினார். அதிர்ச்சி அடைந்த சாமுவேலால் பதில் கூற இயலவில்லை. அன்டனியின் சேவையைப் பாராட்டி

அவர் உருவம் பொறித்த டாலர் நாணயத்தை அமெரிக்க அரசு வெளியிட்டது. அமெரிக்க நாணயத்தில் முகம் காட்டிய முதல் பெண்மணி இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

- எஸ்.பக்கிரிசாமி,
திருவாரூர்



* கன்பூசியஸ்



*அம்பேத்கர்

எங்கே?

மூன்றாம் ஜார்ஜ் மன்னர் ஒரு நாள் மாறுவேடம் பூண்டு தம் நாட்டைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டார். கோதுமை வயல் வெளிக்கு அவர் வந்தபோது, அங்கே ஒரு பெண் மட்டும் வேலை செய்து கொண்டிருந்தாள். அரசர் வியப்புற்று அவளிடம், ''மற்றவர்கள் எல்லாம் எங்கே? நீ மட்டும் வேலை செய்கிறாய்'' என்றார். உடனே அவள், ''அரசர் பவனி வருவதைப் பார்க்க எல்லோரும் சென்றிருக்கிறார்கள்'' என்றாள். ''அப்படியானால் நீ ஏன் போகவில்லை?'' என்றார். ''அந்த முட்டாள்களைப் போல் நான் வேடிக்கைப் பார்க்கப் போனால் கூலி கிடைக்குமா? வேலை தான் எனக்கு முக்கியம்; வேடிக்கை யல்ல'' என்றாள். உடனே அரசர் அவளிடம், தங்க நாணயத்தைக் கொடுத்து, ''மற்றவர்கள் அரசரைப் பார்க்கப் போனார்கள். ஆனால் அரசர் உன்னைப் பார்த்துச் சென்றார் என்று சொல்'' என்று கூறி, புறப்பட்டார்.

- பாலு,
சென்னை


நேசிப்பு...


சீன தத்துவ மேதையான கன்பூசியஸிடம் ஒருவன், ''ஐயா! ஒருவனை அவன் கிராமத்தார் எல்லோரும் நேசித்தால் போதுமா?'' என்று கேட்டான். ''போதாது'' என்றார் கன்பூசியஸ். ''ஒருவனை அவன் கிராமத்தார் எல்லோரும் நிந்தித்தால் போதுமா?'' என்றான்.

''போதாது'' என்றார்.

தொடர்ந்து கன்பூசியஸ், ''கிராமத்தில் உள்ள நல்லவர்கள் அவனை நேசித்து, கிராமத்திலுள்ள கெட்டவர்கள் அவனை நிந்திக்க வேண்டும்'' என்று சொன்னார்.

- அம்பிகா, மதுரை


அம்மாவைத் தேடி...
8
கதை: வாண்டுமாமா
சித்திரம்: மகேஸ்
வேன் டவுனை அடைந்தது.
முதலில் ஒரு பத்திரிகை ஆபீஸுக்குப் போகணும்.
பத்திரிகை போஸ்டரில் -
நடிகை வசந்தா மாயம்! கடத் தலா...
வசந்தா உயிரோடு இருப்பாளா... அல்லது...
இதெல்லாம் 'பப்ளிசிட்டி ஸ்டண்ட்'ப்பா!
ஒருவேளை அந்த நடிகை வசந்தாவிடம் நடிக்கும் சரக்கு தீர்ந்து போயிருக்கும். ஆகவே கடத்தப்பட்டதா அறிக்கை விட்டு ஓடி ஒளிஞ்சிருக்கலாம்.
ஐயோ! எப்படியெல்லாம் பேசறாங்க!
நான் இடிஞ்சு போகக் கூடாது; போகமாட்டேன். பள்ளிக்குப் போய் தனிமையில் சிந்திக்கணும்... என் லட்டு பட்டினியாக கிடக்கு. அதன் பசிக்கு ஏதாவது வாங்கிக் கொண்டு பள்ளி திரும்பிடறேன்.
ஒரு ரொட்டிக் கடையில் அகிலா பன் வாங்கும்போது....
இங்கேதான் இருக்கியா? ஓடிப் போயிடலாம்னு திட்டமா?


அகிலா, இந்திராவின் காருக்குள் திணிக்கப்பட்டாள்.
மேடம், நான் ஸ்கூலுக்கு வந்துடறேன். என் லட்டுவுக்கு இந்தப் பன்னைக் கொடுக்க அனுமதிங்க.
லட்டு உன் பன் இல்லாம செத்துப் போயிடாது.
பள்ளிக்குள் கார் நுழைந்ததும் கட்டுண்ட லட்டு குரலெடுத்துக் குதிக்க - அகிலா பன் பாக்கெட்டை தன் அம்மா அளித்திருந்த கைக் குட்டையில் சுற்றி அதனிடம் வீசினாள்.
லட்டு... லட்டு இதைச் சாப்பிடு... சீக்கிரம்
என்ன துணிச்சல் உனக்கு! அதைக் கொடுக்காதே!
கீழ்ப்படியாமைக்கு உனக்குத் தண்டனை - புத்தி வரும் வரை. இந்த அறையில் கிட.
அகிலாவின் எண்ணமெல்லாம் அவள் அம்மாவைப் பற்றியே.
அம்மா கடத்தப்பட்டிருக்கா. அவளை நான் கண்டுபிடிச்சாகணும்.... அதற்கு முன்னால இங்கிருந்து, மறுபடி தப்பியாகணும்.
லட்டுவை நாய் வண்டியில் அனுப்பறாங்க... இதுவும் நல்லதுக்குத்தான். நான் வெளியேறி லட்டுவையும் நாய்ச்சிறையிலிருந்து விடுவிப்பேன்.


என் லட்டு ஜெயிலுக்குப் போறது. அம்மாவுக்காக மட்டுமில்லாமல், லட்டுவைக் காப்பாத்தவும் நான் இங்கிருந்து தப்பியாகணும்... எப்படியாவது...
... எப்படி வெளியேறுவது? ஒரு மழை நீர்க் குழாயைக்கூடக் காணோமே? காவலாளி வேறு! கட்டடத்தை விட்டு வெளியேறவே முடியாது...
துவண்டு கிடந்த அகிலாவை கதவைத் தட்டும் மெல்லிய ஒலி எழுப்பியது.
யார்...யார் அது...?
கலவரப்படாதே... நாங்கதான் உதவும் கரங்கள்...
இரட்டைக் குழல் துப்பாக்கி என்பார்கள் எங்களை!
இவளுக்கு நாம் ஏன் உதவி செய்யணும்? நடிகையின் மகளை நமக்குப் பிடிக்கலை.
அதுக்கு இல்லே. அந்த இந்திராவை மட்டம் தட்டணும். அதான் பேசாமல் வேலையைப் பாரு.
கொண்டை யூசி மறுபடி சாதனை படைத்து விட்டது.
எனக்குப் புரியலே... நீங்கள் என்னை விரும்பல... அப்படி இருக்க எனக்கு உதவுவானேன்?
இது சுதந்திர நாடு. எங்களால தாங்க முடியலே. நாங்க சொல்றபடி செய். நீ வெளியே போயிடலாம்.


இரட்டைக் குழல் துப்பாக்கி - இரட்டையர் துரிதமாகச் செயல்பட்டனர். குண்டு பெண் ஹாலில் மயங்கிக் கிடந்தாள்.
மை காட்! இவ ஏன் இப்படி மயங்கிக் கிடக்கா?
தலை சுத்துது மேடம்!
சீக்கிரம் அகிலா பக்க வாட்டுக் கதவு வழியே போயிடு. சரஸா இந்திராவை கவனிச்சுப்பா. நினைவிருக்கா? பெரிய மரம்...
அவர்கள் குறிப்பிட்டது இந்த மரத்தைத்தான். காவலாளி அந்தப் பக்கம் திரும்பியதும் மரத்தின் மீது ஏறி...
சமாளிச்சுட்டேன்... காவலாளி கவனிக்கலே!
அகிலா தெரு நாய்க் காப்பகத்தை நோக்கி ஓடினாள்.
என் லட்டுவை மீட்டுட்டேன்னா அதன் பிறகு அம்மாவுக்கு என்ன ஆச்சுங்கறதை கவனிக்க வசதியா இருக்கும்...
அதோ, அதுதான் என் நாய் லட்டு.
உன் அம்மாவோட கடிதம் இல்லாமல் நாயைத் தர முடியாதும்மா.
அடுத்த இதழில் முடியும்



ஆரம்பமே அசத்தல்!

'மர்மப் புத்தகம்' ஆரம்ப அத்தியாயமே விறுவிறுப்புடன் செம த்ரில்லாக இருக்கிறதே! கண்டுபிடிப்புகளின் பிறப்பிடமான சீனாவைப் பற்றிய அரிய தகவல்களை அறிந்து கொண்டேன்.

-சு. இந்துமதி,
நெய்வேலி



'விளையாட்டு அரங்கம்' சிறியவர்களை மட்டுமின்றி பெரியவர்களையும் தன் பக்கம் ஈர்க்கிறது. 'மர்மப் புத்தகம்' அடுத்த இதழுக்கு நல்ல எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறது.

- பிரபாலிங்கேஷ்,
மேலகிருஷ்ணன்புதூர்

'யார் அந்தப் பிரபலம்?' என்று பக்கத்துக்குப் பக்கம் சஸ்பென்ஸாக நகர்த்தியுள்ளீர்கள். 'சக்தி வீணாவதைத் தவிர்ப்போம்' நல்ல விஷயம்.

- மா. வடிவழகன்,
சர்க்கார் கொல்லப்பட்டி

ஷில்பா தன் சிங்கப்பூர் பயண அனுபவங்களைப் பற்றிக் கூறி இருந்ததைப் படித்து ரொம்பவே 'என்ஜாய்' செய்தோம். நேரிலே சென்று பார்த்த பரவசத்தை ஏற்படுத்தி விட்டது...!"

- எஸ்.கே. அபிஷேக்,
நெய்வேலி

என்னைப் போல உள்ள இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கிறீர்கள். நானும் எனது படைப்புகளை அனுப்பி வைக்க உள்ளேன். அதற்கு 'கடிதங்கள்' பகுதியில் பதிலை எதிர்ப்பார்க்கிறேன்.

- கு.அசேன்பாஷா,
வேலூர்

கோகுலம் வாசகர்கள் யார் வேண்டுமானாலும் தங்கள் படைப்புகளைத் தாராளமாக எழுதி அனுப்பலாம். எந்தக் கட்டுப்பாடும் இல்லை. சிறந்த படைப்புகள் கோகுலத்தில் கண்டிப்பாக பிரசுரமாகும் அசேன்பாஷா!

- ஆர்

கற்பனை வளத்தைக் குறைக்கிறது டீ.வி.!

நமது நாட்டில் குழந்தைகள் பிறந்த சில மாதங்களுக்குள்ளாகவே டீ.வி பார்க்க ஆரம்பித்து விடுகின்றன. குறைந்த பட்சம் ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் தினமும் சுமார் ஐந்து மணி நேரம் டீ.வி முன்னால் செலவிடுகிறார்கள். அதன் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால் இருபது வயதுக்குள் இவர்கள் டீ.வி. பார்க்கிற சமயத்தில் சுமார் முப்பத்து மூன்றாயிரம் ஒழுக்கக் குறைவுடைய சம்பவங்களைப் பார்க்க நேரிடுகிறது. விஷுவல் மீடியமான டீ.வியில் இத்தகைய காட்சிகளைப் பார்ப்பது, அந்த இளைய தலைமுறையினரின் மனதில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்று யாரும் யோசித்துப் பார்ப்பதில்லை.

இது ஒரு பக்கம் இருக்க, இப்படி கணக்கு வழக்கு இல்லாமல் தொடர்ந்து டீ.வி பார்ப்பதன் காரணமாக குழந்தைகளின் கண்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. குழந்தைகளின் கிரகிப்புத் தன்மையை இது பாதிக்கிறது. அது மட்டுமில்லை குழந்தைகளின் கற்பனை வளத்துக்கும் டீ.வி தடை போட்டு விடுகிறது. இளம் சிறார்கள், சட்டத்துக்குப்



நெட் பிட்ஸ்

புறம்பான செயல்களில் ஈடுபடுவதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்த ஓர் ஆராய்ச்சியாளர், டீ.வியில் காட்டப்படும் வன்முறை, கலாசார சீர்கேட்டை ஏற்படுத்தும் சம்பவங்கள்தான் என்று கூறுகிறார்.

இந்தியத் தபால் துறைக்கு 150 வயது என்று உங்களுக்குத் தெரியுமா? இந்தியாவில் ஒரு லட்சத்து 55 ஆயிரம் தபால் நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் ஐந்து லட்சத்து 66 ஆயிரம் பேர் பணி புரிகிறார்கள். இந்தியாவில் சராசரியாக சுமார் இருபத்தியோரு சதுர கிலோ மீட்டருக்கு ஒரு தபால் ஆபீஸ் செயல்பட்டு வருகிறது.


இன்றைக்கும் கிராமப்புறங்களில் நம்பிக்கையோடு மக்கள் தங்கள் பணத்தை முதலீடு செய்வதற்கு தபால் அலுவலகத்தையே நாடுகிறார்கள். சமீபத்திய புள்ளி விவரப்படி இந்தியாவின் அனைத்து தபால் அலுவலகங்களிலும் பொது மக்கள் டெபாசிட் செய்துள்ள பணம் எவ்வளவு தெரியுமா? இரண்டு லட்சத்து அறுபதாயிரம் கோடி ரூபாய்! இன்றைக்கும் ஏழை இந்தியக் குடிமகன் தபால் கார்டைப் பயன்படுத்தியே தகவல் பரிமாற்றம் செய்து கொள்கிறான். அதனால்தான் தபால் கார்டு விலை குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஐம்பது பைசாவுக்கு விற்கப்படும் ஒரு தபால் கார்டை, உரிய விலாசதாரரிடம் கொண்டு சேர்க்க, அரசாங்கத்துக்கு ஆகும் செலவு எவ்வளவு தெரியுமா? ஏழு ரூபாய் இருபது காசு!



காகிதத்தில் அச்சிட்டு வெளி வரும் பத்திரிகைகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். ஆனால் ஜெர்மனியில் ஒருவர், கைக்குட்டையில் பத்திரிகை அச்சிட்டு வெளியிடுகிறார். பத்து கைக்குட்டைகளில் பல்வேறு விஷயங்களையும் அச்சிட்டு, அவற்றை ஒன்றாக இணைத்து இந்தக் 'கைக்குட்டை பத்திரிகை' வெளியிடப்படுகிறது. வேலையில்லாத அறுபது வயதுக்காரார், இந்த நூதனமான ஐடியாவை செயல்படுத்தி, வெற்றிகரமான பத்திரிகை ஆசிரியராகி விட்டார்!

படத்தில் நீங்கள் பார்க்கிற மூன்று சிறுவர்களும் சீனாவைச் சேர்ந்தவர்கள். ஜியான்டோ என்ற சீன ஜிம்னாஸ்டிக்ஸ் மையத்தில் இவர்களைப் போல மொத்தம் நூறு சிறுவர்கள் இருக்கிறார்கள். நாலு வயது முதல் பத்து வயதுக்குட்பட்ட இவர்களைத்

தேர்ந்தெடுத்து, இப்போதிலிருந்தே ஜிம்னாஸ்டிக்ஸ் பயிற்சி தருவதற்கு, சீன அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தத் தீவிர பயிற்சியின் மூலமாக, வருங்காலத்தில் இவர்களில் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒலிம்பிக்ஸ் போட்டியில் பங்கேற்க அனுப்பி வைக்கப் படுவார்கள்.



இப்போது புரிகிறதா? ஒலிம்பிக்ஸ் என்றால் சீனாவால் எப்படி பதக்கங்களைக் குவிக்க முடிகிறது என்று?

நம் நாட்டில் ரூபாய் நோட்டுகள் இருப்பது போல, இங்கிலாந்தில் புழக்கத்தில் இருப்பது 'பவுண்டு'. நாணயத்துக்கு, 'பவுண்டு' என்று எப்படி பெயர் வந்தது தெரியுமா?

பிரிட்டிஷ் அளவை முறைப்படி, பவுண்டு என்பது ஒரு நிறுத்தல் அளவீடுதான். பழைய நாளில், ஒரு பவுண்டு எடையுள்ள வெள்ளியை வைத்து 240 நாணயங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த நாணயத்துக்கு பென்ஸ் என்று பெயர். ஆக 240 பென்ஸ் கொண்டது ஒரு பவுண்டு. ஆனால் காலப் போக்கில் ஒரு பவுண்டுக்கு, நூறு பென்ஸ் என்று மாற்றி விட்டார்கள்.

இன்று உலகின் மதிப்பு மிகுந்த கரன்ஸிகளில் மிகவும் முக்கியமானது பவுண்டுதான். ஒரு பவுண்டின் மதிப்பு 83 ரூபாய்!

உலகின் மிகப் பழைமையான நகரம் எது? இன்றுள்ள உலக நகரங்களில், சரித்திர பூர்வமாகப் பார்க்கிற போது, பழைமையான நகரம் என்ற பெருமைக்குரியது சிரியா நாட்டுத் தலைநகரான டமாஸ்கஸ்தான். இது மூவாயிரத்து ஐநூறு வருட பாரம்பரியம் கொண்டது. இதில் விசேஷம் என்னவென்றால் மூவாயிரத்து ஐநூறு வருடமாக அங்கே தொடர்ந்து மக்கள் வசித்து வருகிறார்கள். இன்று உலகின் நவீன நகரங்களில் ஒன்றாக டமாஸ்கஸ் திகழ்கிறது. அங்கு பதினாலு லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அந்தக் காலத்தில் 'கிழக்கிந்திய நாடுகளின் முத்து' என்று பெருமையுடன் குறிப்பிடப்பட்ட நகரம் டமாஸ்கஸ்.

தொகுப்பு:
எஸ். சந்திரமெளலி



மூன்று பனிக்கரடிகள்...

பொதுவாக அனைத்து இமாலய கிராமங்களும் நதிப்படுகையில்தான் இருக்கும். வீட்டின் கூரை சரிந்த கிரானைட் பலகையினால் அமைக்கப்பட்டிருக்கும். கோடைக் காலத்தில், இந்தச் சரிந்த கூரையில், பூசணிக் கொடிகள் படர்ந்து, காய்த்துக் கிடக்கும்.

ஒருநாள் நான் மலையின் மேலுள்ள நண்பனின் வீட்டில் தங்கியிருந்தேன். கூரையின் மேல், யாரோ நடக்கும் ஒலி கேட்டு, விழித்துக் கொண்டேன். நண்பனை எழுப்பி, விசாரித்தேன்.

''பனிக்கரடியாய் இருக்கும். பூசணியைத் தூக்கிட்டு போக வந்திருக்கும்...'' என்றான்.

நாங்கள் ஜன்னல் வழியாக பார்த்தோம். ஒரு கறுப்புக்கரடி வெளியே வயல்பரப்பு வழியே, திருடன் போல் பதுங்கிப் பதுங்கி பூசணிக் காயைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தது. இப்படி அர்த்த ராத்திரியில், நான் பார்க்கும் முதல் கரடி இது தான்.

குளிர்காலத்தில், மலையின் உயர்வான இடங்களில், பனிக்கட்டி மூடிக் கொள்ளும். பழுப்பு மற்றும் கறுப்பு நிறத்திலான இமாலய கரடிகள் உணவைத் தேடி, மலையை விட்டுக் கீழே

இறங்கி வர வேண்டியிருக்கும். சில நேரங்களில், அவை சில வயல்களைச் சூறையாடிவிடும்... கரடிகள் கிட்டப்பார்வை (தூரத்தில் இருப்பது அதற்குத் தெரியாது) உடையதாய் இருப்பதாலும் ஏதாவது நகருகிறதா என்ற சந்தேகத்துடனேயே அனைத்தையும் அணுகுவதாலும் சிறிய தவறுதலான அசைவுகளும், நமக்குப் பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக மாறிவிடும்.

மலைவாசிகள் கரடி துரத்தினால், மலையில் கீழ்நோக்கி ஓடச் சொல்வார்கள். மலையின் மேல் நோக்கி ஓடினால், இந்தக் கரடிகள் எளிதில் நம்மைத் துரத்திப் பிடித்துவிடும்! நான் இதுவரை மூன்று முறை கரடிகளைப் பார்த்திருக்கிறேன் என்றாலும், என்னைக் கரடி துரத்தியது மட்டும் கிடையாது.

ஒருமுறை நான் ஒரு ஸ்புரூஸ் மரத்தின் மேல் உட்கார்ந்திருந்தேன். கீழே ஒரு கரடியின் உறுமல் கேட்டது. ஒரு கரடிக்குட்டி நின்றது. எனக்கு ஒன்றும் அதைப் பார்த்து பயமெல்லாம் ஏற்படவில்லை. நான் அப்படியே அது என்னதான் பண்ணப் போகிறது என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டே, அசையாது அமர்ந்திருந்தேன்.

அது தனது மூக்கைத் தரையின் அருகில் வைத்துக் கொண்டு, முகர்ந்து பார்த்துக்



கொண்டே ஓர் எறும்புப் புற்று இருக்கும் இடம் வரைக்கும் சென்றது. தனது மூக்கால் அந்த எறும்புப் புற்றை ஊத ஆரம்பித்து விட்டது. சுற்றிலும் எல்லா திசைகளிலும் மண் தூக்கி எறியப்பட்டது. ஆனால் கரடிக்கு ஏமாற்றம் தான் மிஞ்சியது. ஏனென்றால் அந்தப் புற்றை எப்பொழுதோ காலி செய்து விட்டு, எறும்புகள் போயிருந்ததால், அது வெறும் காலிப்புற்றுதான். பிறகு உறுமிக் கொண்டே, ஒரு காட்டு பிளம் பழத்தைப் பறிப்பதற்காக அது சென்றது. சீக்கிரமே, அந்தப் பிளம் மரத்தின் உச்சிக் கிளைக்கே வந்து விட்டது. அப்போதுதான், அது என்னைப் பார்த்தது.

உடனே அது அந்த உச்சிக் கிளையை விட்டுக் குதித்து, அதைவிட வலுவான கிளைக்குத் தாவிச் சென்றது. அந்தக் கிளையும் அது எதிர்பார்த்தபடி ரொம்பப் பெரியதாக இல்லாததால், கரடியின் வயிறு இரண்டு பக்கமும் நன்கு எனக்குத் தெரிந்தது. உடனே அது தன் தலையை, இன்னொரு கிளையில் மறைத்துக் கொண்டு, என்னைப் பார்க்காதவாறு இருக்க முயன்றது. மெதுவாய், ஒவ்வொரு அங்குலமாய், அது தன் மூக்கை அந்தக் கிளையில் இருந்து வெளியே நீட்டியது. அதன் கண்கள் என்னைப் பார்த்தது தான் தாமதம், அது உடனே ஒரு குலுக்கலுடன் தனது தலையை கிளைகளுக்குள் மறுபடியும் மறைத்துக் கொண்டது.

இந்த மாதிரி அந்தக் கரடி பலமுறை செய்தது. மெள்ள மரத்தில் இருந்து இறங்கி ஒளிந்து கொண்டேன். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, கரடி மறுபடியும் பார்த்த போது, நான் அங்கு இல்லாததைக் கண்டு சந்தோஷம் பிடிபடவில்லை. அது அப்படியே பழையபடி உச்சிக் கிளைக்குப் போய், அந்தப் பிளம் பழத்தைப் பறித்துக் கொண்டது.

எனது மூன்றாம் கரடியுடன் கூடிய அனுபவமும் இந்த இனத்தின் விநோதத் தன்மையைக் காட்டுவது போல்தான் இருந்தது.

நான் கார்வாலில் உள்ள என் நண்பன் பிரேமின் கிரா

யார் அந்தப் பிரபலம்?



பொதுவுடைமைக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்ததால் அமெரிக்கா ஒரு கட்டத்தில் இவருக்கு அனுமதி மறுத்தது.

மத்தில் தங்கி இருந்தேன். அப்போது சோளக்கொல்லையில், ஓர் ஆண் கரடி தினமும் துவம்சம் செய்து கொண்டிருப்பதாக செய்தி வந்து கொண்டிருந்தது. நாங்கள் ஓர் உயரமான பாறைமேல் உட்கார்ந்து கொண்டோம். அந்தப் பாறை மேல் நின்றால், கொல்லையின் முழுப் பரிணாமமும், நிலவு ஒளியில் நன்றாகத் தெரியும்.

நடுராத்திரிக்குப் பிறகு, ஒரு பெரிய கரடி கொல்லையின் ஒரு முனையில் நின்று கொண்டிருந்தது. தனது பின்னங்கால்களால் ஊன்றி நின்று கொண்டு, எவ்வளவு தூரம் எக்கிப் பார்க்க முடியுமோ, அவ்வளவு தூரம் எக்கி, கொல்லை காலியாகத்தான் இருக்கிறதா என்று ரொம்ப ஜாக்கிரதையாக நகர்ந்து, சோளக் கொல்லைக்குள் நுழைந்தது.

பாதி தூரம் வந்திருக்கும், இரண்டு மரங்களுக்கு இடையே கட்டியிருந்த திபெத்திய தொழுகை கொடியைப் பார்த்து, அதன் கவனம் சுண்டி இழுக்கப்பட்டது. அந்தக் கொடியைப் பார்த்த கரடி, வெறுத்துப் போய் உறுமிக் கொண்டே, பின் வாங்கியது. ஆனால் காற்றில் அந்தக் கொடி படபடத்தது. தன்னை யாரோ கண்டு கொண்டார்கள் என அதை அஞ்ச வைத்தது.

கொடி தன்னை தாக்காது என்பதை உணர்ந்து கொண்டதும், தனக்கு எந்த ஆபத்தும் இல்லை என்பதை அது உறுதி செய்து கொண்டது. அந்தக் கொடியைக் கீழே இழுத்துத் தள்ளியது. பிறகு அதை ஜாக்கிரதையாகப் பரிசோதித்து திருப்தியடைந்த கரடி, மறுபடியும் சோளக் கொல்லைக்குள் நுழைய எத்தனித்தது.

ஆனால் நண்பன் பிரேம், சத்தம் போட ஆரம்பித்தான். கிராமத்தார் உடனே விழித்துக் கொண்டனர். அவர்கள் வீட்டில் இருந்து, மத்தளத்தை அடித்துக் கொண்டும் மண்ணெண்ணெய் டப்பாவைத் தட்டிக் கொண்டும் ஓடி வந்தார்கள்.

தன் உணவு பறிபோன ஆத்திரத்தில், கரடி மலையில் கீழ்நோக்கி ஓட ஆரம்பித்தது.



''அப்பா, நான் இன்று 12 மணி வரை படிக்கப் போறேன்.''

''நல்லது. எப்பொழுது நீ ஆரம்பிக்கப் போகிறாய்?''

''11.55க்கு!''

- முகேஷ் ராஜன்

பிளாட்டிபஸ்!



விசித்திர விலங்குகள் நிறைந்த ஆஸ்திரேலியாவில் வாழும் விலங்குகளில் பிளாட்டிபஸும் ஒன்று. இது முட்டையிட்டு, பால் கொடுக்கும் விலங்கு. இவற்றின் பாதம் தோலால் விரல்களுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

பிளாட்டிபஸ் ஊர்வன பிராணிகளின் குணாதிசயங்களை ஒத்திருக்கிறது. முட்டையிடுவதிலும் கழிவுகளை வெளியேற்றுவதிலும் பிளாட்டிபஸ் ஊர்வனவற்றைப் போலவே செய்கிறது.

நம் வீட்டுப் பூனையின் அளவே பிளாட்டிபஸ் காணப்படுகிறது. ஆணின் உடல் 50 முதல் 60 செ.மீ நீளமும் பெண்ணின் உடல் 40 முதல் 50 செ.மீ நீளம் வரையும் இருக்கும். முதிர்ந்த பிளாட்டிபஸ் 2 கிலோ எடை இருக்கும்.





தண்ணீர் புகாத, தடிமனான தோலின் மேல் அடர்ந்த முடி காணப்படும். ஆழ்ந்த பிரௌன் வண்ணத்தில் உடல் காணப்படும். தட்டையான வாலும் உண்டு.

பிளாட்டிபஸுக்கு தட்டையான, நீண்ட அலகு உள்ளது. இந்த அலகு சாம்பல் மற்றும் கறுப்பு வண்ணத்தில் இருக்கும். அலகின்

மேல் இரண்டு துவாரங்கள் காணப்படும். கீழ் அலகு மேல் அலகை விடச் சிறியதாக இருக்கும். இது தண்ணீருக்குள் மூழ்கி, நீந்தும்போது காது, கண், மூக்குத் துவாரங்களை மூடிக் கொள்ளும்.

பிரமாதமாக நீச்சல் அடிக்கக் கூடியது இந்தப் பிளாட்டிபஸ். ஒரு நாளில் 12 மணி நேரத்தை உணவு தேடுவதிலேயே செலவழிக்கும். 20 -40 நொடி தண்ணீருக்குள் மூழ்கி உணவு தேடும். 10 நொடி வெளி வந்து மூச்சு விடும். ஒரு மணி நேரத்துக்கு 80 முறை இப்படி மூழ்கும். சேகரித்த உணவுகளை













எஸ்.சுஜாதா

வாய்க்கு அருகில் இருக்கும் பையில் சேமித்து வைத்துக் கொள்ளும். கரையேறி தன் வளைக்குள் சென்று பையில் சேமித்த உணவை வாய்க்கு வரவழைத்து மென்று விழுங்கும்.

ஆற்றுப் படுகை, ஏரி,

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

ஏப்ரல் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமான வாசகர்கள் கலந்து கொண்டு, பெரும்பாலும் சரியான விடைகளை அளித்திருந்தனர். எனவே சரியான விடையளித்தவர்களில் இருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



பரிசு யாருக்கு?

1. ஜெ. அனிதா, ஊட்டி
2. பி. பிரவின் கோபால் ராஜூ, கோவை
3. ஜெ. வின்ஃபோர்டு ஃபெர்னான்டோ, அனிதா குமரன் மெட்ரிக் பள்ளி, தண்டுபத்து.
4. அ. சூரிய நிவேதா, கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு
5. நந்தினி, காந்தி பதின்ம மேல்நிலைப் பள்ளி, மதுக்கூர்

சரியான விடை:

1. சீனா 2. WWF
3. மூங்கில் குருத்து
4. சாதுவானது 5. ஆம்

II. 1. மிளகு, 2. பூசணி, 3. பப்பாளி, 4. ரோஜா, 5. தக்காளி, 6. திராட்சை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.

கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!

ஓடை ஓரங்களில் பிளாட்டிபஸ் வளை தோண்டும். நீள்வட்ட வடிவில் 4.5 முதல் 9 மீட்டர் நீளமுடையதாக இருக்கும்.

பொதுவாக பிளாட்டிபஸ் கூட்டாக வாழ்க்கை நடத்துவதில்லை. தனித்தனியாக வளைகளில் வாழ்கின்றன. வருடத்தில் சில காலம் மட்டும் ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பம் நடத்துகின்றன. பெண் பிளாட்டிபஸ் 2 அல்லது 3 முட்டைகளை தாவரங்களால் அமைத்த கூட்டின் மேல், வளைக்குள் முட்டை இடும். 10 லிருந்து 12 நாட்களில் முட்டை ஓட்டை உடைத்துக் கொண்டு குட்டி வெளியே வரும். பிறந்து ஏழு வாரங்கள் வரை குட்டிகள் வளைக்குள்ளேயே, அம்மாவிடம் பால் குடித்துக் கொண்டிருக்கும். அதன் பிறகு சிறிது சிறிதாக வளையிலிருந்து வெளி வந்து வெளி உலகத்தை அறிந்து கொள்ளும். ஐந்து மாதங்களுக்குப் பின் குட்டி தனியாக வசிக்க ஆரம்பித்து விடும்.

புழு, பூச்சிகள், கடல் வாழ் சிறிய உயிரினங்கள், தலைப்பிரட்டை போன்றவை பிளாட்டிபஸின் உணவு.

பார்வைத் திறன் அதிகம்; தண்ணீருக்குள் இரையை நன்றாகப் பார்க்க முடியும். இவற்றின் ஆயுட்காலம் 10 முதல் 15 ஆண்டுகள்!



விடுமுறையை மேலும் உற்சாகப்படுத்த உங்களுக்கு இந்த மாதமும் ஒரு கேம் 48-49 ஆம் பக்கங்களில் வழங்கி இருக்கிறோம்.

முதலில் 1 முதல் 28 வரை எண்களைத் தனித்தனியாக ஒரே அளவிலான தாளில் எழுதிக் கொள்ளுங்கள். பிறகு நன்றாக குலுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

இரண்டு முதல் மூன்று பேர் வரை விளையாடலாம். ஒரு வெள்ளைத் தாளில் பெயர்களை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

முதலில் ஒருவர் சீட்டை எடுக்க வேண்டும். அந்த எண்ணுக்கு உரிய கேள்வியைப் படிக்க வேண்டும். ஒரு நிமிடத்துக்குள் பதில் சொல்ல வேண்டும்.

பதில் சரியானதாக இருந்தால் 5 மதிப்பெண்கள். அந்தச் சீட்டை வெளியில் வைத்து விட வேண்டும்.

பதில் தவறாக இருந்தால் அந்தச் சீட்டை மீண்டும் மற்ற சீட்டுகளுடன் குலுக்கி வைத்துக் கொள்ளுங்கள்.

இப்படி மாறி மாறி சீட்டை எடுத்து விளையாட வேண்டும். அனைத்து சீட்டுகளையும் பயன்படுத்திய பின் இறுதியில் மதிப்பெண்களைப் போட்டுப் பார்க்க வேண்டும். யார் அதிக மதிப்பெண் பெற்றிருக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவர்.

விளையாடி மகிழுங்கள்!



எல்லோரும் விடுமுறையில் இருப்பீர்கள். உங்கள் நண்பர்களுடன் இந்தக் கதையை நாடகமாகப் போட்டு நடித்துப் பாருங்கள். உங்கள் அனுபவத்தை எழுதி அனுப்புங்கள்.



வெங்காயத்தின் பெருமை!

காய்கறிக் கடை ஒன்றில் இருந்த எல்லாக் காய்கறிகளுக்கும் கொஞ்சம் தண்ணீரைத் தெளித்து விட்டுக் கடைக்காரர் லேசாகக் கண்ணயர்ந்து விட்டார்.

அப்போது காய்கறிகள் கசமுசவென்று தமக்குள் ஏதோ பேச ஆரம்பித்து, உரத்த குரலில் ''நான் பெரியவன் நீ பெரியவன்'' என்ற வாதத்தில் இறங்கி விட்டன.

அதில் உருவத்தில் பெரியதாக இருந்த பூசணிக்காய், ஒவ்வொருவராக வந்து அவர் அவர் பெருமையைப் பாட்டாகப் பாடினால் தீர்ப்பு சொல்லுவதாகச் சொன்னது.


உடனே எல்லாக் காய்களும் வரிசையாக வந்து அவரவர் பெருமைகளைப் பாட ஆரம்பித்துவிட்டன.

பீன்ஸ்: பீன்ஸ் பீன்ஸ்தான், சூப்பர் பீன்ஸ் தான்! பச்சை ஜீன்ஸ் போட்ட பீன்ஸூதான்!

கத்தரிக்காய்: கத்தரிக்காய், குண்டு கத்தரிக்காய்! கம்மாக்கரை ஓரம் கண்ணைச் சிமிட்டுவேன், கண்ணுக்கு அழகா பாவாடை கட்டுவேன்.



சேனை: எர்ரானி குர்ரதனி கோபாலா எம்பேரு சேனைக் கிழங்கு கோபாலா!



கோஸ்: ஒருவன் ஒருவன் முட்டைக்கோஸ், நான் அடுக்கடுக்கான அழகு கோஸ்!


மிளகாய்: பச்சை மிளகாய்... பச்சை மிளகாய்... காரச் சுவைதரும் பச்சை மிளகாய்!

புடலை: புடலை! புடலை... உசிலம்பட்டி புடலங்காய் முத்திப் போச்சு. என் உயரம் பார்த்துப் பலர் கழுத்து சுளுக்கிப் போச்சு!

கருவேப்பிலை: அதாண்டா இதாண்டா கருவேப்பிலை நான்தாண்டா!



யார் அந்தப் பிரபலம்?



மிகவும் வறுமையில் வளர்ந்தவர். ஆனால் பின்னாளில் திரைப்பட உலகின் முதல் கோடீஸ்வர நடிகர்!

துவையலோ, பொரியலோ எல்லாத்திலும் நான்தாண்டா!

இஞ்சி: இஞ்சி இடுப்பழகு, மஞ்சள் சிவப்பழகு, எலுமிச்சை எனக்கு ஜோடிதான்!

வெள்ளரிக்காய்: வெள்ளரிக்கா பிஞ்சு வெள்ளரிக்கா என்னைப் பார்க்காம போனாலே சன் ஸ்ட்ரோக்தான்!

கீரை: கீரைதான் எனக்கு வெச்சபேரு! என்னைப் பருப்புப் போட்டுக் கடைஞ்சு வெச்சா தின்னாதவர் யாரு? கிரீன்ஸ் தான் எனக்கு வெச்ச பேரு!

கொத்தமல்லி: சிங்குச்சான் சிங்குச்சான், பச்சக்கலரு மல்லி தான், பார்க்க அழகு சிங்குச்சான்!

இன்னும் தக்காளி, வெண்டைக்காய், அவரைக்காய் எல்லாம் பாட்டுப் பாடத் தயாரான போது எல்லாரையும் முந்திக் கொண்டு வெங்காயம் ஓடி வந்தது.

வெங்காயம்: பாடியது போதும்! எல்லோரும் வைகுண்டம் போவோம். அந்தப் பந்தயத்தில் ஜெயித்தவர்கள்தான் பெஸ்ட் காய்கறிகள்! சரியா?

எல்லாக் காய்கறிகளும் ஓட ஓட பாதி வழியிலேயே தேங்காய், "நான் ரன்னிங் கமெண்டரி தருகிறேன், அதுபோதும்" என்று மைக்கைப் பிடித்தது.

மற்றக் காய்கள் காய்ந்து விழுந்து விட்டன.

கடைசியில் வைகுண்டத் தோட காலிங் பெல்லை அழுத்தினது வெங்காயமும் பச்சை மிளகாயும்தான்!

மகா விஷ்ணு வெளியே வந்து பார்த்தால் வெங்காயமும் காய்ந்து போன பச்சை மிளகாயும் நின்றன.

வெங்காயத்தைப் பார்த்து, "உன்னைக் குறுக்கே வெட்டினால், சக்கரம், நெடுக்கே வெட்டினால் சங்கு - நீயும் என்னைப் போல் நீல நிறம். எனவே நீதான் வின்னர்" என்று சொன்னார்.

பிறகு என்ன வரம் வேண்டும் என்று கேட்டார் விஷ்ணு. வெங்காயம் "வழியில் காய்ந்து போன எல்லாக் காய்களையும் எழுப்ப வேண்டும்; எல்லாக் காய்களையும் சேர்த்து செய்த உப்புமாவை மகாவிஷ்ணு நிவேதனமாக ஏற்க வேண்டும்". சிரித்தபடியே மகா விஷ்ணுவும் வரம் அளித்தார். எல்லாக் காய்களும் கை கோத்தபடி பாடி, ஆடி மகிழ்ந்தன.

சத்தம் கேட்டுக் கண் விழித்த கடைக்காரன் அத்தனையும் கனவு என்று தெரிந்து கொண்டு சிரித்தான்.

விடுகதைப் பக்கம்

பச்சைக் கோட்டைக்குள் பன்னீர்!



I

1. கழுத்து இருக்கும் ஆனால் தலை இருக்காது - கை இருக்கும் ஆனால் விரல் இருக்காது - அது என்ன?

2. முள்ளிருக்கும் ஆனால் குத்தாது - அது என்ன?

3. வெளியே வெள்ளி உள்ளே தங்கம் - அது என்ன?

-கே.ராமச்சந்திரன்,
நாகர்
கோவில்

II

1. கிணற்றைச் சுற்றி அருகம்புல் - அது என்ன?

2. நான்கு முக்குப்பட்டி; நடுவில் ஓடுது குதிரைக் குட்டி - அது என்ன?

3. வெட்ட வெட்டத் தளுக்குது வேலப்பன் கட்டை - அது என்ன?

- சு.தில்லை ரமேஷ்,
எட்டாம் வகுப்பு,
புனித சவேரியர்
நடுநிலைப் பள்ளி,
ஆவுடையாள்புரம்

III

1. கண்ணாடிச் சிறைக்குள் கைதிகள் மூவர் - அவர்கள் யார்?

2. பச்சைக் கோட்டைக்குள் பதுக்கிய பன்னீர் - அது என்ன?

3. வண்ண வண்ண வட்ட நிலா, வாங்கி ஒட்டும் குட்டி நிலா - அது என்ன?

- எஸ். கவிதா
திருநெல்வேலி

IV

1. வெற்றிலை போடாமல் வாய் சிவந்தவன் - அவன் யார்?

2. ஆயிரம் அறைகள் அத்தனையும் இனிப்பு - அது என்ன?

3. அங்கும் இங்கும் போய் வந்தாலும் அலுப்பாகத் தெரியாது அவனைப் பார்த்தால் - அவன் யார்?

- பி. பிரவீன், கோவை

விடைகள்:

I
1. சட்டை
2. சீப்பு
3. முட்டை

II
1. கண் முடி
2. அம்மிக் குழவி
3. முடி

III
1. கடிகார முட்கள்
2. இளநீர்
3. ஸ்டிக்கர் பொட்டு

IV
1. கிளி
2. தேன் கூடு
3. ஊஞ்சல்

பிரமிட் கேம்



28
தி —
ண —
ஊ

26
நிலவில் முதலில்
காலடி எடுத்து
வைத்தவர்?

23
ஆடு போல்
கத்தவும்.

24
‘அ
தலை
சொ

19
புலி எனத்
துவங்கும்
பழமொழி ஒன்று.

20
20ல்
இருந்து 1
வரை எண்களைப்
பின்னோக்கிச்
சொல்லவும்.

14
ஒரு குறள்

15
குரங்கு சேஷ்டை
செய்யவும்.

16
ஒ

விளக்கம் 43
ஆம் பக்கம்

8
சிங்கப்பூரின்
நாணயம்?

9
நிலவு,
அறிவு என்பதைக்
குறிக்கும் ஒரு
சொல்

10
மல்லிகைக்குப்
பெயர் பெற்ற
ஊர்?



1
இந்தோனேஷி
யாவின் தலைநகர்?

2
பாரதியார் பிறந்த
ஊர்?

3
ஒலிம்பிக்ஸ்
வளையத்தின்
வண்ணங்கள்
என்னென்ன?

4
மூக்க
அ

___ல___
ரு ___
ழ ___
___

27
தமிழ்நாட்டில் உள்ள 3 மலைப் பிரதேசங்கள்?



முதல்
ரை
ன்றி
வும்.

25
பாரதி பாடல் ஒன்று. (4 அடி...)

21
பறக்க இயலாத பறவைகள் இரண்டு?

22
சச்சின் பற்றி 4 வரிகள் சொல்லவும்.



ஜாக்

17
ஒலி தந்தவன், உருக்குலைகிறான் - அது என்ன?

18
ஹாரிபாட்டர் எழுதியவர்?

11
நிலா என துவங்கும் பாடல்?

12
இந்தியாவில் முதல் பெண் ஐ.பி.எஸ்?

13
ஹாலந்தின் இன்னொரு பெயர்?

கல்
ரைக்கு
திலே
ங்கயிறு
ன்ன?

5
தமிழகத்தில் உள்ள மாங்குரோவ் காடு எது?

6
குளம்பி என்றால் என்ன?

7
திருவாரூர் என்றதும் நினைவுக்கு வருவது?

தெரிந்ததும் தெரியாததும்

விசித்திர மணிகள்


ஆழி


ஆலய வழிபாடுகளிலும், அரண்மனைகளிலும், கால்நடைகளின் கழுத்திலும் மணிகள் ஒலித்தன; ஒலிக்கின்றன. மணிகள் சிறிய வடிவிலும் மிகப் பிரம்மாண்டமான வடிவிலும் வார்க்கப்பட்டன.



உலகிலேயே பெரிய மணி மாஸ்கோவில் இருக்கிறது. 1733-ஆம் ஆண்டு வார்க்கப்பட்ட இதன் எடை 193 டன்கள்! உயரம் 6.38 மீட்டர்! அடிப்பக்கத்தின் குறுக்களவு 7.02 மீட்டர்! மணிச் சுவரின் கனம் 75 செ.மீ! இந்த மணியின் அடிப்பக்கத்தில் ஒரு பகுதி உடைந்துவிட்டதால், இப்போது இது ஒலிப்பதில்லை. 'கிரெம்லின்' சதுக்கத்தில் இது பார்வைக்காக இப்போது வைக்கப்பட்டிருக்கிறது. இது வார்க்கப்பட்டு 97 ஆண்டுகள் தொங்கவிடப் படாமல் தரையில் இருந்தது. 1836-இல் தான் ஒரு கட்டடத்தில் தொங்கவிடப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் கட்டடம் தீப்பிடித்துக் கொண்டதால், மணி கீழே விழுந்து உடைந்து விட்டது. இந்த மணியின் நாக்கை ஒவ்வொரு பக்கத்திலும் 25 பேர் நின்று இழுத்து மணியின் விளிம்பில் மோதி ஒலி எழுப்பவேண்டும்!


பர்மாவில், 'மாண்டலே'யில், 'மிங்கன் பகோடா' பௌத்த ஆலயத்தில் மிகப் பெரிய மணி இருக்கிறது. இதன் எடை 87 டன்கள்! உயரம் 3.87 மீட்டர்! அடிப் பக்கத்தின் குறுக்களவு 5.04 மீட்டர்! 1838-இல் ஏற்பட்ட பூகம்பத்தில் இந்த மணி கீழே விழுந்து விட்டது. இப்போது இது ஒலிப்பதில்லை.






பிரசித்திப் பெற்ற மணிகளுள் ஒன்று அமெரிக்காவில் 'பிலடெல்பியா'வில் உள்ள 'விடுதலை மணி.' இதை அமெரிக்காவின் மிகப் பெரிய பொக்கிஷமாகக் கருதுகிறார்கள். இதன் கீழேதான் 13 காலனிநாடுகளின் பிரதிநிதிகளுக்கும் முதல் விடுதலைப் பிரகடனம் செய்யப்பட்டது.

ரஷ்யாவில் 'உக்லிச்' நகரில், 16-ஆம் நூற்றாண்டில் நடந்த கிளர்ச்சியில் நூற்றுக்கணக்கான பேர் கொல்லப் பட்டார்கள். பலர் சைபீரியாவுக்கு நாடு கடத்தப்பட்டார்கள். அந்தக் கிளர்ச்சிக்குத் தூண்டுதலாக ஒரு மணி ஒலிக்கப்பட்டது. எல்லாம் முடிந்த பிறகு, கிளர்ச்சிக்குக் காரணமாக இருந்தது என்று இந்த மணிக்குத் தண்டனை கொடுத்தார்கள்! எப்படி? பொது இடத்தில் இந்த மணியைப் போட்டார்கள்; கைக்குக் கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு தாக்கினார்கள். இதன் நாக்கை அறுத்து வீசினார்கள்! இந்த மணியை சைபீரியாவுக்கு நாடு கடத்தினார்கள்!





இது உலகத்திலேயே புதுமையான மணி என்று கருதப்படுகிறது. இதன் பெயர் 'பெல்ப்ரை'. நியூஸிலாந்தில், 'மாவோரி' இனமக்களின் 'கம்பச் சின்னம்' இது. மனித வடிவத்தின் வாயில், நாக்குக்குப் பதிலாக மணி தொங்கவிடப்பட்டிருக்கிறது.



எந்த நாட்டு மக்கள் முதன்முதலில் மணியை உருவாக்கினார்கள் என்பது தெரியவில்லை. ஆனால், உலகத்தின் மிகப் பழைமையான மணி ஒன்று பாபிலோன் நகரத்திற்கு அருகில் கண்டெடுக்கப் பட்டிருக்கிறது. இது 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று சொல்லப் படுகிறது!

எடுத்துப் போனவன் யார்?

செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவர் மிகவும் கஞ்சன். புத்திசாலியான, சிந்திக்கத் தெரிந்த ஒருவனை வேலைக்கு வைத்தால் தன் செல்வத்தைப் பற்றி ஊராருக்குச் சொல்லி விடுவான். மேலும் ஊதியமும் அதிகமாக கேட்பான் என்று நினைத்து முட்டாள் ஒருவனை வேலைக்கு வைத்துக் கொண்டார். ஊரார் அந்த வேலைக்காரனை மட்டி என்றே அழைத்தனர்.

ஒரு நாள் வியாபார விஷயமாக செல்வந்தர் மட்டியையும் அழைத்துக் கொண்டு தனது குதிரை வண்டியில் புறப்பட்டார். நீண்ட தூரப் பயணம் என்பதால் இரண்டு, மூன்று நாட்களுக்குத் தேவையான உணவையும் எடுத்துச் சென்றனர். வேலை முடிந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்போது சூரியன் மறையும்



நேரமாகிவிட்டது. ''மட்டி, இன்னும் சற்று நேரத்தில் இருட்டி விடும். எனவே இங் கேயே தங்கி இரவுப் பொழு தைக் கழிப்போம்'' என்றார் செல்வந்தர்.

''சரிங்க ஐயா! இங்



கேயே தங்குவோம். ஆனால் குதிரையையும் குதிரை வண்டியையும் திருடர்களிட மிருந்து எப்படி பாதுகாப் பது?'' என்றான் மட்டி.

''பயணக் களைப்பு அதிக மாக இருப்பதால் நான் தூங் கறேன். நீ இரவு முழுவதும் தூங்காமல் குதிரையையும் குதிரை வண்டியையும் காவல் காத்துக் கொண்டிரு. ஏதே னும் சிந்தித்துக் கொண்டிருந் தால் தூக்கம் வராது. சிந்திப்ப தால் நீ புத்திசாலியாக வும் ஆகலாம்'' என்றார். குதிரையை வண்டியில் இருந்து கழற்றி சற்றுத் தள்ளி கட்டினார்கள்.

''நான் இப்போது இருந்தே சிந்திக்கிறேன் ஐயா'' என்றான் மட்டி. சிறிது நேரத்தில் சூரியன் முழுவது மாக மறைந்து விட்டது. ''மட்டி, நீ என்ன சிந்தித்துக் கொண்டிருந்தாய்?''என்றார் செல்வந்தர். ''நான் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே இந்தச் சூரியனை யார் எடுத் துப் போனது என்று தான் சிந்தித்துக் கொண்டிருந் தேன்'' என்றான் மட்டி.

''பரவாயில்லையே, நன்றாகச் சிந்திக்கிறாயே! இப்படியே சிந்தி'' என்று உற்சாகப்படுத்தினார் செல்வந்தர்.

அது வளர்பிறைக் காலம் என்பதால் இருட்டத் தொடங்கிய சில மணி நேரத்திலேயே வானில் பிறைநிலா பளிச் செனத் தெரிந்தது. வானில் நிறைய நட்சத்திரங்களும் இருந்தன. இரவு உணவு முடித்ததும் எஜமானர் வண்டியை விட்டு சற்றுத் தள்ளி காற்றாட படுத்துக் கொண்டார். மட்டி தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரம் கழித்து நிலவு முழுமையாக மறைந்தது. எஜமானர் எழுந்து, ''இப்பொழுது என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார் மட்டியிடம். ''ஐயா, இப்பொழுதும் நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இந்த நிலவை எவனோ எடுத்துச் சென்று விட்டானே! அது யாராக இருக்கும் என்றுதான் சிந்திக்கிறேன்!'' என்றான்.

''வாழ்க உனது சிந்தனை! தொடர்ந்து சிந்தி'' என்றபடி செல்வந்தர் படுத்து உறங்கி விட்டார். திடீரென்று காற்று வீசாததால் வியர்த்துக் கொட்டியது. எஜமானர் விழித்தார். ''காற்றே இல்லாமல் போச்சே! இப்போ என்ன சிந்திக்கிறே?'' என்றார்.

''அட இதைப் பாருங்க, நானும் அதைப் பற்றித்தான் சிந்திக்கிறேன். நான் ஒருவன் இங்கு இருக்கும் பொழுதே 'ஜிலுஜிலு' வென்று வீசிக் கொண்டிருந்த காற்றை எடுத்துப் போனது யார்?'' என்றான். ''ம்... சிந்தனைவாதி ஆகிவிட்டாய். தூங்காமல் இப்படியே சிந்தி'' என்றபடி உறங்கிப் போனார் செல்வந்தர்.

நள்ளிரவைத் தாண்டி நெடுநேரமானது. நட்சத்திரங்கள் மறையத் தொடங்கின. சிறிது நேரம் கழித்து திடீர் என்று விழித்த செல்வந்தர், ''இப்போது எதைப் பற்றி சிந்திக்கிறாய்?'' என்றார்.

''சிதறிக் கிடந்த நட்சத்திரங்கள் அவ்வளவையும் எவனோ ஒன்று விடாமல்

யார் அந்தப் பிரபலம்?



தொப்பி, விசித்திரமாக வெட்டப்பட்ட மீசை ஆகியவற்றோடு இவர் திரைப்படங்களில் அடித்த கொட்டங்கள் குழந்தைகளுக்கு மிகவும் பிடிக்கும்.

அள்ளிக் கொண்டு போய் விட்டானே, அவன் யாராக இருக்கும் என்றுதான் சிந்திக்கிறேன்'' என்றான் மட்டி. குளிர் காற்று வீசியது. மீண்டும் அவர் உறங்கி விட்டார்.

பொழுது பொலபொலவென்று விடியத் தொடங்கியது. திடுக்கிட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தார் செல்வந்தர். ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான் மட்டி. ''இப்பொழுது என்ன சிந்திக்கிறாய்?'' என்றார் அவர். ''உங்கள் பின்னால் திரும்பிப் பாருங்கள்'' என்றான் மட்டி. சுற்றும் முற்றும் பார்த்தவர் குதிரையையும் வண்டியையும் காணாதது கண்டு திடுக்கிட்டார். ''அடேய் மட்டி, வண்டியும் குதிரையும் எங்கேடா? யார் கொண்டு போனது?'' என்று அலறினார்.

''அதுதான் நானும் சிந்திக்கிறேன். சூரியனையும் நிலவையும் காற்றையும் நட்சத்திரங்களையும் கொண்டு போனவன்தான் குதிரையையும் வண்டியையும் கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால் நான் சிந்தித்து பார்த்தவரையில் அவன் குதிரை, வண்டியைத் திரும்ப கொண்டு வந்து வைத்துவிடுவான் என்று நினைக்கிறேன்'' என்றான் சற்றும் அசராமல்.

''பறிகொடுத்தது மட்டுமல்ல. கொண்டு வந்து வைத்து விடுவான் என்று கிண்டல் வேறு செய்கிறாயா? எடுத்துக் கொண்டு போனவன் எப்படிடா கொண்டு வந்து வைப்பான்?'' என்று கோபத்தோடு கேட்டார் செல்வந்தர்.

''பின்னே! எடுத்துக் கொண்டு போன சூரியனையும் காற்றையும் இதோ திரும்பக் கொண்டு வந்து வைத்திருக்கிறானே! அப்படியிருக்க நமது குதிரையையும் வண்டியையும் கொண்டு வந்து வைக்க வேண்டுமல்லவா!'' என்று பெருமிதத்தோடு சொன்னான் மட்டி!



''வர வர... உலகத்துக்கு அறிவே இல்லாமப் போச்சு.''

''என்னடா உளர்றே?''

''ஆமாண்டா. உலக அறிவைப் பெருக்கணும்னு வாத்தியார் அடிக்கடி என்கிட்டே சொல்றாரே!''


- அனுராதா ராஜப்பா


கடன்!

கதை, படம்: ராம்கி











சற்றுப் பொறுங்க... நான் உள்ளே போய் பார்த்துவிட்டு வருகிறேன்.
உள்ளே வந்த சோமுவுக்கு குறுக்கு புத்தி வேலை செய்தது.
சந்தேகமே இல்லை. இவர் பணம் கேட்கத்தான் வந்திருக்கிறார். இந்த ஆளை வெளியே அனுப்ப வேண்டும்.
வெளியே வந்த சோமு கோபத்துடன்...
ஐயா பெரியவரே, உங்களைப் பற்றி எந்தக் குறிப்பும் இல்லை.
பரவாயில்லை! எழுதாவிட்டால் கொடுத்த பணம் இல்லையென்று ஆகிவிடுமா...?
அப்பா மறைந்து ஒரு வருடம் ஆகிறது. சாட்சி எதுவும் இல்லாமல் கொடுத்த பணம் பற்றி பேசுவது சரியில்லை.
பெரியவர் அமைதியாகப் பேசினார்.
மனசாட்சியை விட பெரிய சாட்சி எதுவும் உலகத்தில் இல்லை.



நான் ஒரு பைசாகூட தரக் கூடாது.
பணம் பறிக்க வந்தீங்களா? மரியாதையாக வெளியே போய் விடுங்கள்.
தம்பி, நான் உன்னிடம் பணம் வாங்க வரவில்லை... கொடுக்கத்தான் வந்தேன்...
என்ன சொல்ரீங்க...?
உன் அப்பா எனக்கு விவசாயத்திற்காக பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருந்தார். அவர் காலமாகியது சமீபத்தில்தான் எனக்குத் தெரிந்தது. இதில் பத்தாயிரம் ரூபாய் இருக்கிறது.
ஐயா, தங்களைப் பற்றி புரியாமல் ஏதேதோ பேசி விட்டேன். என்னை மன்னியுங்கள்.
பரவா யில்லை தம்பி. பணத்தை உன்னிடம் சேர்த்ததால் என் மனச்சுமை குறைந்து விட்டது. நான் வரேன்.
சோமுவுக்கு குற்ற உணர்வில் மனம் கனத்தது.



கோகுலம் சந்தா செலுத்துங்கள்;
கதை கேளுங்கள்!

எப்படி பெறலாம்?

* புதிதாக சந்தா செலுத்தலாம் ☐
* ஏற்கெனவே உள்ள சந்தாவை மேலும் ஓர் ஆண்டுக்கு நீட்டிக்கலாம் ☐
* உங்கள் நண்பருக்குப் பரிசாக சந்தா கட்டி நீங்கள் காஸெட் பெறலாம். ☐

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

நண்பரின் பெயர்: ....

முகவரி: ....

....

....


....

ஒரு வருட சந்தா ரூ. 72/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் அனுப்பினால் ரூ.20/- கூடுதலாக சேர்த்து அனுப்புங்கள்.


அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032





மணம் பரப்பும் ஃபிரான்ஸ்!



ஃபிரான்ஸ் என்றாலே, முதலில் நம் நினைவுக்கு வருபவை மனதை மயக்கும் நறுமணத் திரவங்கள், வகை வகையான சோப்புகள், பவுடர்கள், யூ-டி.கோலான் வகைகள், ஓவியர் பிக்காசோ, மாவீரன் நெப்போலியன் போனபர்ட் போன்றவைதான்! 'ஃபிரான்ஸ்' என்ற நாடு, ஐரோப்பாவின் வடமேற்கு ஓரத்தில்தான் உலகப் படத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

ஃபிரெஞ்சு நாடு கிட்டத்தட்ட அறு கோண அமைப்பு உடையது. இதன் நீளம் 965 கி.மீ; அகலம் 935 கி.மீ. கிட்டத்தட்ட இந்தியாவில் 1/3 பகுதி தான். இதன் தலைநகரும் பெரிய நகரும் பாரிஸ்தான்! சுற்றிலும் தொடர் மலைகளால் சூழப்பட்டு, எழில் கொஞ்சும் நாடு ஃபிரான்ஸ். சைன், லோரி,



மோகனா


போவோமா
புது உலகம்!

சாவோன், ரோன் நதிப் படுகைகளும் பள்ளத்தாக்குகளும் அழகு கொழிக்கும் இடங்கள். ஃபிரான்ஸ் வளமான பூமி, செயின்லோர்ரி, கரோன் நதிகள், ஃபிரெஞ்சு நாட்டைச் செழிக்க வைக்கின்றன. இதன் வடக்கு, மேற்குப் பகுதிகளில் இறந்த எரிமலைகள் காணப்படுகின்றன. ஏகப்பட்ட இயற்கைத் துறைமுகங்கள் உள்ளன.


ரோன் நதிதான் பெரிய நதி. இதுதான் ஃபிரான்ஸுக்குப் பெரும்பாலான நீர்வளத்தை வழங்குகிறது. சைன் நதி உள்நாட்டு நீர்வளத்தைத் தருகிறது. ஃபிரான்ஸில் ஏரிகள் குறைவு. கடுமையான குளிரும் உண்டு. கொடுமையான கோடையும் உண்டு.

ஐரோப்பா கண்டத்திலுள்ள பலவகை இயற்கை தாவரங்கள் ஃபிரான்சில் உள்ளன. செஸ்நட், பீச், ஓக், சேர்க், வால்நட், பிர், பைன் மரங்கள் காடுகளில் காணப்படுகின்றன. பெரிய பாலூட்டிகளான மான், நரி, சாமிஸ், ஓநாய், காட்டுப் பன்றியும் பலவகை பறவைகளும் உண்டு.

94% மக்கள் ஃபிரான்ஸ் நாட்டில் பிறந்து வளர்ந்தவர்களே! மீதமுள்ள 6% மக்கள் அல்ஜீரியர்கள், மொராக்கர்கள், டூனிசியன்கள், போர்ச்சுகீசியர்கள், இத்தாலியர்கள், ஸ்பானிஷ்காரர்கள். பாரிஸின் மத்தியப் பகுதியில் சைன் நதியின் குறுக்கே கட்டப்பட்ட 'பான் டெஸ் ஆன்ட்ஸ்' என்ற பாலம்தான் போக்குவரத்துக்கும் பொருளாதார, அரசியல், கலாசார இணைப்பு மையமாகத் திகழ்கிறது.

ஃபிரெஞ்சுதான் அலுவலக, உள்ளூர் மொழி. ஃபிரான்ஸ் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கி வருகிறது. 12-ம் நூற்றாண்டின் 'பாலில் பல்கலைக் கழகம்' இன்றும் தொடர்ந்து, நவீனப்படுத்தப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் உள்ள கல்விக்கான முன் மாதிரிகளும் கல்வியாளர்களும் ஃபிரான்சில் வாழ்ந்தனர்.

ஃபிரான்ஸ் முழுவதும் மேற்கத்திய நாகரிகமே காணப்படுகிறது. கலாசாரத்தின் முன்னோடியாகத் திகழ்கிறது. ஐரோப்பாவின் சிறந்த கலைஞர்கள், கைவினைஞர்கள் பாரிஸில்தான் உள்ளனர். 'ஃபிரெஞ்சு ஸ்டைல்' மேற்கத்திய நாகரிகத்தையும் தாண்டியது. இசைக்கான பாரம்பரியத்தில்



"சின்ன முள் எதுல இருக்கு, பெரிய முள் எதுல இருக்குன்னு பார்த்திட்டு வரச் சொன்னேனே, பார்த்திட்டு வந்தியா?"

"பார்த்திட்டு வந்தேன் சார். ரெண்டு முள்ளுமே கடிகாரத்திலதான் இருக்கு சார்!"

- மு. பெரியசாமி, விட்டுக்கட்டி



''திருடன் திருடிக் கொண் டிருக்கும்போது நீங்க என்ன செய்துகிட்டிருந்தீங்க?''

''அவன் எடுத்துக்கிட்டுப் போற சாமான்களின் லிஸ்ட்டை எழுதிக் கொண்டிருந்தேன்!''

- பி. சந்தியா

நீண்டகால சிறப்புப் பெற்றது ஃபிரான்ஸ். பாரம்பரிய இசை, நடனம், பாடல்கள் அழியாமல் பாதுகாக்கப்படுகின்றன.

பல நாட்டு மன்னர்கள் பார்த்து வியந்த 14-ம் லூயி, ஃபிரான்ஸ் நாட்டை கலை, இலக்கியத்தில், ரோமாபுரிக்கு இணையாக மாற்றினார். ஃபிரெஞ்சு மொழிக்கு 'அறிஞர்களின் மொழி' என்ற கிரீடம் கிடைத்தது. இவருக்குப் பணி புரிய 10,000 பணியாளர்கள் இருந்தனர். அவர்கள் வசிக்க 'வேர்செய்ல்ஸ்' என்ற இடத்தில் ஒரு மாளிகை கட்டினார். உலகம் கண்டிராத பிரம்மாண்டமான மாளிகை, மனதை மயக்கும் ஓவியங்கள், சிலிர்க்க வைக்கும் சிற்பங்கள், கண்ணைக் கவரும் நீரூற்றுகள் நிறைந்தது!

1977ல் பாரிஸில் திறக்கப்பட்ட தேசிய கலாசார மையம், உலக சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் ஈர்க்கிறது. ஃபிரான்சில் உள்ள முக்கிய நகரங்களில் நூலகமும் அருங்காட்சியகமும் உண்டு. 'பிபிலியோத் நேஷனல்' என்ற நூலகத்தில் 10 மில்லியன் புத்தகங்கள் உள்ளன. உலகிலுள்ள முக்கிய புத்தகங்கள் அனைத்தும் இங்கே உண்டு. 20ம் நூற்றாண்டின் ஓவியங்கள், மாடல்கள், முன் வரைவு மாதிரிகள், அரண்மனைகள், மாளிகைகள், தேசிய நினைவுச் சின்னங்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.


விவசாய நாடான ஃபிரான்ஸ், இரண்டாம் உலகப் போருக்குப் பின் தொழில் மய நாடாக உருவெடுத்தது.

ஃபிரான்ஸ்தான் உலகின் முன்னணி விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியாளர். உலகின் ஒயின் உற்பத்தியில் முன்நிற்பது ஃபிரான்ஸும் இத்தாலியும்தான். பீட்ருட், கோதுமை, உருளை, சோளம், பார்லி, ஓட்ஸ், டர்னிஃப், சணல் வகை, ஹெம்ப், புகையிலை, ஆப்பிள், பியர்ஸ், பிளம்ஸ், பீச், பெர்ரி, செர்ரி, ஆரஞ்சு, பயிரிடப்படுகின்றன. மோட்டார் வாகனங்கள், விமானங்கள், தொலைகாட்சி, ரேடியோ, வேதிப் பொருட்கள் உற்பத்தி செய்யப் படுகின்றன. பட்டு உற்பத்தி, நூற்பாலை, ஆடை உற்பத்தியில் சிறந்து விளங்குகின்றனர். வாசனைப் பொருட்கள் (பவுடர், சென்ட்) கையுறை, கடிகாரம் திரைச்சீலைகள், கண்ணாடிப் பொருட்களில் ஆடம்பரப் பொருட்கள், மரச்சாமான்கள்





வகை வகையாக உற்பத்தி செய்வதில் கில்லாடிகள் இவர்கள். ஃபிரான்சில் வாசனைப் பொருட்கள் தயாரிக்க 'லாவண்டர்' செடி, கோடிக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்படுகிறது. ஃபிரெஞ்சு மாவீரன் நெப்போலியன் போருக்குப் போகும்போது, 'எலுமிச்சை புல்' மணம் நிறைந்த வாசனைத் திரவத்தை பூட்ஸுக்குள் அப்படியே கொட்டிக் கொண்டு போவாராம். பல கி.மீ தூரத்துக்குப் போர்க்களமே மணக்குமாம்! போருக்குப் புறப்படும் முன்னரே, நிறைய சென்ட் பாட்



டில்கள் வரவழைத்து வைத்திருப்பாராம்.

பாரிஸ் என்றாலே ஈபிள் கோபுரம்தான் நினைவுக்கு வரும். நாணயம் 'ஃபிராங்க்'. 7 ஆண்டுக்கு ஒரு முறை அதிபர் தேர்வு நடைபெறுகிறது. நிறைய அரசியல் கட்சிகள் உள்ளன. 18-35 வயது வரை அனைவரும் கட்டாயமாக தேசிய சேவையில் ஈடுபட வேண்டும்.

ஒரு லட்சம் ஆண்டுக்கு முன்பே மக்கள் ஃபிரான்ஸில் வாழ்ந்தனர். பழைய கற்காலத்திலிருந்து இங்கு மக்கள் வசிக்கின்றனர்.

1789ல் ஃபிரெஞ்சுப் புரட்சி வெடித்தது. 1914ல் முதல் உலகப் போரில், ஃபிரான்ஸ் நுழைந்த போது, 3,00,000 மக்களை போரில் பலி கொடுத்தது. 6,00,000 பேர் ஊனமுற்றனர். 1946ல் மீண்டும் புது குடியரசானது. தொடர்ந்து போர்களைச் சந்தித்த ஃபிரான்ஸில் தற்போதும் கலைகளும் கட்டடங்களும் வாசனைப் பொருட்களும் இயற்கை காட்சிகளும் காணக் கிடக்கின்றன.





காங்கேயனுக்கு லாபமா, நஷ்டமா?


I நண்பரை இறங்கு வரிசையில் ஒரு 4 இலக்க எண்ணை எழுதச் சொல்லவும். பின்னர் அதனை வலமிருந்து இடமாக மாற்றி அமைத்து எழுதி, முதல் எண்ணில் இருந்து இரண்டாவது வந்த எண்ணைக் கழிக்கச் சொல்லவும். கழித்து வரும் எண்ணை முன் போலவே வலமிருந்து இடமாக மாற்றி எழுதி இரண்டையும் கூட்டச் சொல்லவும். அவருக்குக் கிடைக்கும் விடையை 10890 என்று நாம் சொன்னால் ஆச்சரியப்படுவார்தானே!

- ஏ.எஸ். யோகானந்தம்,
ஔவையார்பாளையம்

II காங்கேயன் என்பவர் தன் உதவியாளரிடம் செக் கொடுத்து வங்கியில் பணம் பெற்று வரும்படி அனுப்பினார். வங்கி காசாளர் கவனக்குறைவாக ரூபாய் கட்டத்தில் உள்ளதை காசுகளாகவும் காசு கட்டத்தில் இருந்ததை ரூபாயாகவும் எண்ணிக் கொடுத்து விட்டார். உதவியாளரும் எண்ணிப் பார்க்கவில்லை. அதிலிருந்து சைக்கிள் வாடகையாக 20 காசு கொடுத்துவிட்டு மீதமுள்ளதை காங்கேயனிடம் தந்தார். தொகையைப் பெற்ற காங்கேயனுக்கு ஆச்சர்யம். ஏனென்றால் அவர் செக்கில் குறிப்பிட்ட தொகை போல் இரு மடங்காய் இருந்தது. செக்கில் என்ன தொகை குறிப்பிட்டு இருப்பார்?

- அ. கோகுலகிருஷ்ணன்,
ஒன்பதாம் வகுப்பு,
நகர மேல் நிலைப்பள்ளி,
கும்பகோணம்

III கீழேயுள்ள 15 தீக்குச்சிகளில் எந்த 3 குச்சிகளை நீக்கினால் ஒரே அளவுள்ள மூன்று சதுரங்கள் கிடைக்கும்?



- கார்த்திக்
முத்துகிருஷ்ணன்,
ஜவஹர் பள்ளி,
நெய்வேலி

IV பாலுவின் சகோதரர்களின் எண்ணிக்கையும் சகோதரிகளின் எண்ணிக்கையும் ஒன்றே. மாலாவின் சகோ

தரர்களின் (பாலுவும் அவர்களில் ஒருவன்) எண்ணிக்கையோ அவனது சகோதரிகளின் எண்ணிக்கையைப் போல இரண்டு மடங்கு. அப்படியானால் சகோதரர்கள் எத்தனை பேர்? சகோதரிகள் எத்தனை பேர்?

- என். ஜரினா பானு, திருப்பட்டினம்

V எங்கள் வீட்டுத் தொட்டி முழுவதும் காலியாக இருந்தது. மோட்டாரைப் போட்டேன். 6¼ மணிக்குத் தொட்டியில் 1/3 பாகம் நிறைந்தது. 6¾ மணிக்கு பாதி தொட்டிதான் நிறைந்திருந்தது. தொட்டி நிறைய இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்? பள்ளிக்குச் செல்வதற்கு முன் நிறைந்துவிடும் என தோழியிடம் க்ளூ கொடுத்தேன். அவளும் சரியாக விடையைக் கூறிவிட்டாள். எங்கே நீங்களும் உடனே விடையைக் கூறுங்கள் பார்க்கலாம்!

- சிவ. மணவழகி, ஆதனூர்



VI செந்திலுடைய பாக்கெட்டில் சிறிது பணம் இருந்தது. அந்தப் பணத்தை இரண்டாகப் பங்கிட்டால் ஒரு ரூபாய் மீதி இருக்கும். மூன்றாகப் பங்கிட்டால் இரண்டு ரூபாயும் நான்காகப் பங்கிட்டால் மூன்று ரூபாயும் ஆறாகப் பங்கிட்டால் ஐந்து ரூபாயும் மீதி இருக்கும். ஏழாகப் பங்கிட்டால் மீதியில்லாமல் சரியாகப் போய் விடும். அப்படியானால் செந்திலுடைய பாக்கெட்டில் எவ்வளவு பணம் இருந்தது?

- ச. ராஜம், காந்திகிராமம்

VI 'சரிகமபதநி' என்ற எழுத்துகளை விடைகளின் முதல் எழுத்தாகக் கொண்டு இப்புதிர் அமைந்துள்ளது.

1. காமராஜரின் அரசியல் குருவாகத் திகழ்ந்தவர் ______

2. நில நடுக்கம் குறிப்பிடப்படும் அளவு ______

3. ராமாயணத்தில் வரும் ஒற்றைக் கண் பாத்திரம் ______

4. தோலினால் சுவாசிக்கும் உயிரி ______

5. தாவரங்களின் முக்கிய நிறமி ______

6. பெரிய கோயில் உள்ள ஊர் ______

7. 'வானளாவிய நகரம்' என்றழைக்கப்படுவது ______

- எஸ். நெகனிகா, இரண்டாம் வகுப்பு, க்ளுனி பள்ளி, பாண்டிச்சேரி

புதிர் உலகம் விடைகள்


I இறங்கு வரிசை 4 இலக்க எண்: 7632
வலமிருந்து இடமாக மாற்றினால் 2367

கழிக்க கிடைப்பது 5265
5265ஐ மாற்றினால் 5625

10890

II. காங்கேயன் குறிப்பிட்ட தொகை = 26.53
உதவியாளர் பெற்று வந்த தொகை = 53.26
சைக்கிள் வாடகை = 00.20
காங்கேயன் பெற்ற தொகை = 53.06
26.53 + 26.53 = 53.06

III



IV சகோதரர்கள் - 4 பேர்
சகோதரிகள் - 3 பேர்

V 6¼க்கு 1/3 பாகம்
6¾ ½ பாகம்
ஆக 30 நிமிடத்தில்
½ - 1/3 = 1/6
1/6 பாகம் நிரம்ப
½ மணி
முழுத் தொட்டி
நிரம்ப 3 மணி.
பாதித் தொட்டி
நிரம்ப 1½மணி

VI 119 ரூபாய்

VII

1. சத்தியமூர்த்தி
2. ரிக்டர்
3. கபந்தகன்
4. மண்புழு
5. பச்சையம்
6. தஞ்சாவூர்
7. நியூயார்க்

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 கோ	வ	ல	ன்	■	ம்	ள	ன்	2 அ
பா	■	■	ளா	■	ர	■	■	ண்
ல	■	ளி	3 கா	■	4 வா	ழை	■	ண
ன்	5 பொ	■	■	6 கா	■	■	7 மா	ன்
■	■	■	8 வெ	ற்	றி	■	■	■
ம்	9 ஆ	■	■	று	■	■	10 தே	ர்
ட	■	ணை	11 அ	■	12 பா	ளை	■	ப
ட்	■	■	ம்	■	க	■	■	ப்
13 ப	ரு	ப்	பு	■	ன்	கூ	ங்	14 ர



ரயில் கிளம்பியதும் அந்தப் பெரியவர் தன் பெயர் அக்பர் என்றும் வாணியம்பாடியைச் சேர்ந்தவர் என்றும் கூறினார். தன் தாத்தா காலத்திலிருந்து, வியாபாரத்திற்காக கெய்ரோ நகரத்திலே வசித்து வருவதாகச் சொன்னார்.

2 மர்மப் புத்தகம்!



சங்கரன் தன் துணி ஏற்றுமதி நிறுவனத்தைப் பற்றிக் கூறினார். எகிப்து நாட்டின் தலைநகரமான கெய்ரோவில், எகிப்து நாட்டின் உயர்தரமான பஞ்சாலைகளைப் பற்றி அக்பரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

உடனே ராதிகா, ''எங்கள் இந்தியாவின் தென்னாட்டு 'மான்செஸ்டர்' என்ற பெயர் கோவைக்கு உண்டு. திருப்பூர் பனியன் ஆலைகள் உலகப்பிரசித்தி பெற்றவை. மிதமான சீதோஷ்ண நிலையுடன் கூடிய அழகான ஊர். பேரூர் சிவன் கோவிலும் மருதமலை முருகன் கோவிலும் மிகவும் புகழ் வாய்ந்த கோவில்கள். ஊட்டி கோவைக்கு அருகிலேயே உள்ளது'' என்று பெருமையுடன் கூறினாள்.

''உங்கள் ஊரைப் பற்றி அதிகம் தெரிந்து வைத்துள்ளாய். நீ புத்திசாலிப் பெண்'' என்று

அக்பர் புகழ்ந்தார். மேலும் எகிப்து நாட்டைப் பற்றி பேசத் துவங்கினார்.

''ராஜூ, புத்தகங்கள் ஏதும் படிக்கவில்லையா?'' என்று அம்மா கேட்டார். ''ராதிகா மெதுவாக, புத்தகப் பையை எடுக்காதே'' என்றாள். ''இல்லைம்மா, எனக்குத் தலைவலி. நான் தூங்கப் போறேன்'' என்றான் ராஜூ.

அக்பர் ''தம்பி! நீ தூங்குப்பா. உன் புத்தகப்பையைக் கொடு. நான் சிறிது நேரம் புத்தகங்களைப் படித்து விட்டுத் தருகிறேன்'' என்றார்.

''இல்லை, நான் யாருக்கும் என் புத்தகங்களைத் தருவதில்லை'' என்று ராஜூ கோபமாகக் கூறினான்.

''என்ன இது ராஜூ, இப்படியா ஒரு பெரியவரிடம் பேசுவது?'' என்று சங்கரன் அதட்டினார். ராதிகா, ''சார், அவனுக்குத் தலைவலி. அதனால் அவனைத் தொந்தரவு செய்யாதீங்க. என் பையில் எல்லாப்



புத்தகங்களும் உள்ளன. அரக்கோணம் தாண்டியவுடன் தருகிறேன்'' என்றாள்.

பிறகு அக்பர் பார்க்காத நேரத்தில், ''பயப்படாதே ராஜு. உன் புத்தகங்களையெல்லாம் பெட்டியில் வைத்து இருக்கேன். பையில் என் புத்தகங்கள் மட்டுமே இருக்கு'' என்றாள் ராதிகா.

அரக்கோணம் ரயில் நிலையத்தில், ராஜு முகம் கழுவச் சென்றான். கதவருகில் அக்பர் அவன் கையைப் பிடித்து, ''இதோ பார், அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுத்துவிடு. இல்லையேல் விபரீதங்களைச் சந்திப்பாய்'' என்றார்.

''என்ன, மிரட்டுறீங்களா? அது நான் வாங்கிய புத்தகம். எது நடந்தாலும் சரி, நான் தரமாட்டேன். உங்களால் ஆனதைப் பாருங்கள்'' என்று ராஜு கையை உதறினான்.

''என்னப்பா நீ, சொன்னால் புரிந்து கொள்ள மறுக்கிறாய். அந்தப் புத்தகம் உன் கையில் இருக்கும் வரை பேராபத்து'' என்றார்.

''என்னது ஒரு புத்தகத்தினால் ஆபத்தா? நல்ல கதையாக இருக்கிறதே''-ராஜு சிரித்தான். ''இதோ பாருங்கள். இனி என்னை மிரட்டினால், என் பெற்றோரிடம் கூறிவிடுவேன். ஜாக்கிரதை'' என்றான்.

பிறகு பயணம் முழுவதும் அக்பர் எகிப்து நாட்டின் பெருமைகளைப் பற்றி கூறினார். சங்கரன் தன் நிறுவனத்தின் கிளை கெய்ரோவில் உள்ளது என்றார்.

ராஜு எகிப்து நாட்டைப் பற்றி கேள்விகள் கேட்க நினைத்தாலும் அக்பரிடம் பேசப் பிடிக்காமல் கண்களை மூடிக் கொண்டு தூங்குவது போல பாசாங்கு செய்தான்.

கோவை ரயில் நிலையத்தில் எல்லோரும் இறங்கினர். அக்பர் தன் உடைமைகளை எடுத்துக் கொண்டு சங்கரனிடம் விடை பெற்றார். திடீரென்று ராஜுவிடம் ''ராஜு, அதோ பார் புத்தகக் கடை'' என்று காண்பித்தார்.

எல்லோரும் திரும்பி கடையைப் பார்த்தனர். ராதிகா திடீரென்று ''அப்பா, என் கதைப் புத்தகப் பையை அந்த ஆள் திருடிக்கிட்டு ஓடறார்'' என்று பதறினாள்.

சங்கரன் திகைத்துப் போனார். அவர் சுதாரிப்பதற்குள் அக்பர் கூட்டத்தில் மறைந்துவிட்டார். ராஜு ஓடி அவரைப் பிடிக்க முற்பட்டான். ஆனால் விமலா, ''வேண்டாம்பா. கூட்டத்தில் நீ தொலைந்து விட்

யார் அந்தப் பிரபலம்?



ஹிட்லரைத் துணிச்சலாக தன் திரைப்படங்களில் நையாண்டி செய்தவர்.

டால், என்ன செய்வது?'' என்று தடுத்து விட்டார்.

''சே! வயதில் பெரியவர் என்று எத்தனை மரியாதையுடன் இருந்தேன். ஆனால் கடைசியில் நம் பையைத் திருடி விட்டாரே'' என்று சங்கரன் வருத்தப்பட்டார். ராஜு ரகசியமாக, ''ராதிகா, நீ மிகவும் புத்திசாலி. என் புத்தகங்களைக் காப்பாற்றிவிட்டாய்'' என்றான்.

இரண்டு நாட்கள் கழித்து ராஜு புத்தகங்களை எடுத்தான். ''ராஜு, பரீட்சை நெருங்குது. கதைப் புத்தகங்களைப் படிக்கக் கூடாது'' என்று விமலா சொன்னார். ''அம்மா, நான் வாங்கியுள்ளது பயனுள்ள, அறிவை வளர்க்கும் புத்தகங்கள். அதில் அகிலா என்னிடம் கொடுத்த சிறுவர் சிறுமியருக்கான சாலை விதிப் பாடல்கள் எனும் புத்தகத்தைக் கொடுங்கள்.''

''அந்தப் புத்தகம் பள்ளிக்கு சைக்கிளில் செல்வோருக்கு உபயோகமாக இருக்கும்'' என்றார் சங்கரன். பிறகு ''உங்களுக்கு ஒரு நல்ல செய்தி. எனக்குப் பதவி உயர்வுடன், எகிப்து நாட்டு தலைநகருக்கு மாற்றல் செய்துள்ளனர். இந்த ஆண்டு பரீட்சை முடிந்தவுடன் உங்கள் விடுமுறையை எகிப்தில் கொண்டாடலாம்'' என்றார்.

''ஹையா! நான் அதிர்ஷ்டசாலிதான். எகிப்து நாட்டை நேரில் பார்க்கப் போறேன்'' ராஜு மகிழ்ச்சியுடன் கூறினான்.

''குழந்தைகளின் படிப்பு எப்படிங்க?'' விமலா கவலையுடன் கேட்டார். ''எகிப்தில் அரேபிய மொழியும் ஃபிரெஞ்சு மொழியும் தான் பள்ளியில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. அதனால் நாம் கோவையை காலி செய்து விட்டு, சென்னையில் சேர்த்துவிடலாம்'' என்றார் சங்கரன்.



''நாளைக்கு காலையிலே எங்க வீட்டு காம்பவுண்ட் சுவரை எழுப்பிடலாம்னு இருக்கோம்.''

''ஏண்டா? இத்தனை நாளா அது தூங்கிக்கிட்டிருந்துச்சா?

- அனுராதா ராஜப்பா

ராதிகா அன்றிரவு, ''ராஜு, நீ அந்த எகிப்து நாட்டு மர்மங்கள் புத்தகம் வாங்கியதும் அந்தப் பெரியவர் அதைத் திருட முயற்சி செய்ததும் இப்பொழுது நாமே எகிப்திற்குச் செல்வதும், ஏதோ ஓர் ஆபத்து நம்மைச் சூழப் போகிறது என்று எனக்குப் பயமாக இருக்கிறது'' என்றாள்.

''என்ன ராதிகா இது? விதியை மதியால் வெல்லலாம் தெரியுமா? பயப்படாதே'' என்றான் ராஜு.

(தொடரும்)

1000/- ரூபாய் பரிசுப் போட்டி

இங்கு 5 கேள்விகளும் 6 படங்கள் மற்றும் பெயர்களும் கொடுக்கப்பட்டுள்ளன. சரியான விடைகளைத் தேடிக் கண்டுபிடித்து எழுதுங்கள். பெற்றோர் கையொப்பம் அவசியம். முகவரி கூப்பனை ஒட்டி உங்கள் முழு முகவரியைத் தெளிவாக எழுதி அனுப்புங்கள். மொத்தப் பரிசு ரூ. 1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசித் தேதி: 20.06.2005

I. பதில் என்ன?



1. ஆந்தை இரவு நேர உயிரினம், சரியா?
2. ஆந்தையால் 180°க்கு கழுத்தைத் திருப்ப முடியுமா?
3. ஆந்தை நமது தோழனா?
4. ஆந்தை சைவ பட்சியா?
5. ஆந்தை கூடு கட்டுமா?

II. பூக்களின் பெயர்களைச் சரியாக எழுதுங்கள்.













துலிப், ரோஜா,
அல்லி, ரஃப்ளேஷியா,
தாமரை, குங்குமப்பூ

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



அழுதது ஏன்?

என் மூன்று வயது தம்பியை பள்ளியில் சேர்த்தார்கள். முதல் நாள் ரொம்ப சந்தோஷமாக என்னோடு பள்ளிக்குக் கிளம்பினான். என் பாட்டி அவனிடம், ''கண்ணா, பயப்படாதே, நிறைய சின்னப் பசங்க வருவாங்க. அவங்க எப்படி நடந்துக்கறாங்களோ, அப்படியே நீயும் செய்'' என்று அறிவுறுத்தினார். பள்ளியில் அவன் சமர்த்தாக இருக்கையில் அமர்ந்து டாட்டா காட்ட, நாங்கள் திரும்பி விட்டோம். மாலையில் அழைத்து வரச் சென்றபோது அழுது கொண்டிருந்தான். என் பாட்டி, ''ஏன் அழுதாய்?'' என்று கேட்க, ''நீதானே பாட்டி மற்ற பிள்ளைகள் என்ன செய்றாங்களோ அதே மாதிரி செய்யச் சொன்னே. எல்லோரும் அழுதாங்க, அதனாலே நானும் அழுதேன்'' என்று சொன்னானே பார்க்கலாம்!

- ஜெ. சரார்,
ஆறாம் வகுப்பு,
ஜீவனா பள்ளி, மதுரை

எஸ்.எம்.எஸ்

என் தங்கை (சித்திமகள்) நான்சியும் நானும் அடிக்கடி எஸ்.எம்.எஸ். மூலம் நலம் விசாரித்துக் கொள்வோம். நான்சி, தாத்தா இல்லாதபோது தான் தாத்தாவின் செல்போனை பயன்படுத்துவாள். அப்பொழுது தாத்தா ஒருவாரம் ஊருக்



குச் சென்று விட்டார். நான்சி எனக்கு 'பரோட்டா மண்டையா எப்படியிருக்கே' என்று செய்தி அனுப்பினாள். தாத்தா வந்ததை அறியாத நான், 'ஹாய் குட்டை! முழுங்கிட்டியா?' என்று பதிலுக்கு அனுப்பினேன்.

அதை வாசித்த தாத்தா அந்த எஸ்.எம்.எஸ் என் அம்மாதான் அனுப்பியிருக்கிறார் என்று நினைத்து, ''என்ன வரவர இந்தப் பிள்ளைக்கு மரியாதையே தெரிய மாட்டேங்குது'' என்று சொல்ல, நான்சியும் பாட்டியும் வந்த சிரிப்பை அடக்க வெகு சிரமப்பட்டனராம். பிறகு தாத்தாவிடம் மன்னிப்புக் கேட்டேன்.

- எஸ்.டேனியல் லியோ பிரபு, மதுரை

கொடுத்து வைத்தவர்கள்!



பேருந்து கட்டணம்...

சிவகாசியில் எங்களுக்கு உறவினர்கள் இருக்கிறார்கள். எங்கள் ஊரிலிருந்து சிவகாசிக்குப் பேருந்து கட்டணம் பதினொரு ரூபாய். ஒருமுறை எங்கள் ஊருக்குப் பக்கத்திலுள்ள திருவில்லிபுத்தூரில் ஒரு திருமண நிகழ்ச்சியில் குடும்பத்துடன் கலந்துகொண்டுவிட்டு சிவகாசிக்குக் கிளம்பினோம். அங்கிருந்து சிவகாசிக்கு பேருந்து கட்டணம் ஏழு ரூபாய். இதைக் கவனித்த என் அக்கா மகன், ''திருவில்லிபுத்தூரில் இருக்கிறவங்க எல்லாரும் ரொம்பக் குடுத்து வச்சவங்க'' என்றான். ''ஏன் அப்படி சொல்றே?'' என்று கேட்டோம். அதற்கு அவன், ''நம்ம ஊர்ல இருந்து சிவகாசிக்குப் பதினொரு ரூபாய். ஆனா திருவில்லிபுத்தூரிலிருந்து வெறும் ஏழு ரூபாய் மட்டும்தானே! அதனால நாமளும் திருவில்லிபுத்தூருக்கே குடி வந்துருவோம்'' என்று அவன் சொல்ல அனைவரும் வயிறு குலுங்கச் சிரித்தோம்.

- அ.பேச்சியப்பன் ராஜபாளையம்



நினைவில் நின்றவை...


வேதாளத்திடம் மாட்டிய அஜ்மால்!
நீண்ட நாட்களுக்கு முன் பெர்ஷியாவில் அஜ்மால் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் நீண்ட பயணத்துக்குக் கிளம்பினான்.
கொஞ்சம் திராட்சையும் பேரிச்சம் பழத்தையும் எடுத்துக்கலாம்.
வழியில் ஆள் இல்லாத பகுதியை அடைந்தான் அஜ்மால்.
ஹா...ஹா... அப்படியே நில்.
கடவுளே! வேதாளத்திடம் இருந்து காப்பாற்று.
ஹா...ஹா... எனக்குக் கீழ்ப்படியாமல் இங்கிருந்து செல்ல முடியாது.
சரி, நான் என்ன செய்ய வேண்டும்?
எனக்குத் தாகமாக இருக்கிறது. தண்ணீர் வேண்டும்.
ம்... ஏதாவது செய்யலாம்.
அஜ்மால் சில கூழாங்கற்களுடன் திராட்சைகளைச் சேர்த்தான்.
இங்கே பாரு, கூழாங் கற்களிலிருந்து தண்ணீரை வர வழைக்கிறேன்.
ஆ!



அஜ்மால் கைகளைத் தேய்த்து பழச்சாற்றைக் கொடுத்தான்.
அருமை!
சிறிது நேரத்தில் -
ஏதாவது சாப்பிடக் கொடு.
இந்தக் கூழாங்கற்களைப் பழங்களாக மாற்றித் தருகிறேன்.
அஜ்மால் கூழாங்கற்களை எடுத்து மந்திரம் சொன்னான்.
பிறகு வேதாளத்திடம் கொடுத்தான்.
ஆஹா! அருமையான சுவை!
© JINGLE BELL CREATIONS
இவனை என் அடிமையாக்கி விட்டால் நல்லது.
நண்பனே, நீ என்னுடைய விருந்தினர். இன்று இரவு என்னுடன் தங்கு.
சரி.
ஏதோ ஏமாற்றப் பார்க்கிறது.


அஜ்மால் வேதாளத்தின் கோட்டைக்குள் சென்றான்.
ஒரே இருட்டாக இருக்கிறது!
ஹா...ஹா... என்னுடைய மந்திர நீரைக் குடித்தால், எனக்கு அடிமையாகி விடுவான்.
என்னை என்ன செய்யப் போகிறதோ?
சிறிது நேரத்தில் -
ஏதோ வண்டு! இதை எடுத்து அந்தக் குவளைக்குள் போட்டு விடலாம்.
© JINGLE BELL CREATIONS
அஜ்மால் வண்டை குவளைக்குள் போட்டு மூடினான்.
இதை வைத்து தந்திரமாகத் தப்பி விடணும்.
விழித்திருக்கிறான். இந்த மந்திர நீரைக் கொடுத்து விடலாம்.



தூங்கவில்லையா? இதைக் குடி.
என்னால் தூங்க முடியலை.
ஏன்? என்னாச்சு?
ஒரு வண்டு தொந்தரவு கொடுத்துக் கொண் டிருந்தது.
எங்கே வண்டு? அது எப்படி என் விருந்தினரைத் தொந்தரவு செய்யலாம்?
இந்தக் குவளைக்குள் இருக்கு.
அதுக்குப் பாடம் புகட்டறேன்.
© JINGLE BELL CREATIONS
வேதாளம் குவளைக்குள் செல்லவும் அஜ்மால் குவளையை அடைத்தான்.
ஹா! ஹா! வேதாளம் அடைபட்டு விட்டது.
ஏய்! என்ன?
அஜ்மால் குவளையை கடலுக்குள் வீசினான்.
நல்ல வேளை, தப்பித்தேன்!
புத்திசாலித்தனத்துடன் செயல் பட்ட அஜ்மால் தன் பயணத்தைத் தொடர்ந்தான்.



கண்டு களிப்போம்!

- தளவை இளங்குமரன்

அவரவரின் வீட்டிலொரு
அழகுப்பூங்கா அமைப்போம்!
ஆடு மாடு மேய்ந்திடாமல்
அதற்கு வேலி அடைப்போம்!

விவரமாகக் களைகளை நாம்
வேருடனே பறிப்போம்!
வீரியமாய் வளர உரம்
விதைத்து நீரும் இறைப்போம்!

புவி நெகிழும் படியழகுப்
பூச்செடிகள் வளர்ப்போம்!
புத்தம் புதுப் பூக்களங்கு
பூக்கக் கண்டு களிப்போம்!

தவமிருந்து நம்மைப் பெற்ற
தாய்தந்தையை மதிப்போம்!
தலைவணங்கி மலர்கள் தூவித்
தாழ்பணிந்து துதிப்போம்!



அன்புள்ள உங்களுக்கு...

எல்லாமே புதுசு!

விடுமுறை முடிந்து, பள்ளி திறக்கும் நேரம். புது வருடம், புது வகுப்பு, புதுச்சீருடை, புதுப் புத்தகங்கள், புது ஷூ, புதுப் பை, புது டீச்சர் என எல்லாமே புதுப் புது அனுபவங்களாக இருக்கும். இந்தப்

புதிய அனுபவங்களுக்காகவே பலரும் பள்ளி திறக்கும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

மேலே குறிப்பிட்ட விஷயங்கள் எல்லா மாணவ, மாணவியருக்கும் பொருந்துமா என்று கேட்டால் பொருந்தாது என்ற பதிலைத்தான் தர வேண்டியிருக்கிறது.

பெரிய கட்டடங்கள், மிகப் பெரிய விளையாட்டு மைதானம், பரிசோதனைக் கூடங்கள், வசதியான வகுப்பறைகள், பல கலைகளையும் கற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள், நூலகம் என ஒருபுறம் கல்விக் கூடங்களின் வளர்ச்சி மகிழ்ச்சி தருகிறது.

இன்னொருபுறம் வகுப்பறை இன்றி, மரத்தடியில் கற்க வேண்டிய சூழ்நிலை, போதிய ஆசிரியர்கள் இல்லாமை, பரிசோதனைக்கூடங்களைக் கற்பனையில் மட்டுமே பார்க்கக் கூடிய நிலை, ஒரு வகுப்பில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இருத்தல், 'நூலகம்' என்றால் என்ன? என்று கேட்கக்கூடிய சூழ்நிலை, விளையாட்டு மைதானம் இன்றி, கழிப்பறை வசதிகூட இல்லாமல் ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்கள் இயங்கி வருகின்றன; மாணவர்களும் படித்து வருகிறார்கள் என்பதை நினைக்கும்போது மிகவும் வருத்தமாக இருக்கிறது.

இந்நிலை மாற வேண்டும். நம் நாட்டில் எல்லாக் குழந்தைகளுக்கும் பாரபட்சமின்றி கல்வி வழங்கப்பட வேண்டும். இந்த விஷயத்தைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் சிந்தித்து, அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி புதிய விடியலுக்குப் பாடு பட வேண்டும். இது நம் ஒவ்வொருவரின் கடமையும்கூட.

- தம்பிப்பயல்

படம் : ஸ்ரீஹரி

யார் அந்தப் பிரபலம்?



1889ல் லண்டனில் பிறந்து, 1977ல் ஸ்விட்சர்லாந்தில் இறந்தவர்.

பெயர்களைக் கண்டுபிடியுங்கள்!



கீழே உள்ள கேள்விகளுக்குப் பதிலை எழுதுங்கள். பதிலில் வட்டமிட்டுள்ள எழுத்துகளைச் சரியாகச் சேர்த்தால் இந்தியாவின் மிக முக்கிய பொறுப்பில் இருக்கும் இருவரின் பெயர் கிடைக்கும். சரியான விடைகளை எழுதி முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் தெளிவான முகவரியைக் குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள். சரியான விடை அளித்தவர்களில் இருந்து 10 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி 20.6.2005

I. 1. மஞ்சள் நதி சீனாவின் ○___ ___ ___ ___

2. வீடு கட்ட இது அவசியம் ___ ___ ___ ○___

3. அடைக்கும் தாழ் இதுக்கு கிடையாது ○___ ___ ___

4. இரண்டாவது ஆங்கில மாதம் ___ ○___ ___ ___ ___

5. வேரில் பழுப்பது ___ ○___

6. நாரதர் இது நன்மையில் முடியும் ○___ ___ ___ ___

7. கிராமத்துக் கலைகளில் ஒன்று ___ ___ ___ ○___

II. 1. கொழுக்கட்டையை இப்படியும் சொல்லலாம் ○___ ___ ○___ ___

2. அரசனுக்கு இன்னொரு பெயர் ○___ ○___ ___ ___

3. கீர் காடுகளில் வசிக்கும் பிராணி ○___ ○___ ___ ___

4. துள்ளி ஓடும் புள்ளி ___ ○___



ஆசிரியர்,
கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

கோடை விடுமுறைப் போட்டி - II



குட்டப்பனும் குட்டிப் பிசாசும்!

குட்டப்பன் ஒரு விறகு வெட்டி. தினந்தோறும் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி, பிழைப்பு நடத்தி வந்தான்.

ஒரு நாள் காட்டில் இருந்த மரம் ஒன்றை வெட்ட குட்டப்பன் கோடாரியை ஓங்கினான். அப்போது அந்த மரத்தில் இருந்து, ''குட்டப்பா, இந்த மரத்தை வெட்டாதே'' என்ற குரல் கேட்டது.

குட்டப்பன் மரத்தின் உச்சியைப் பார்த்தான். மரத்தின் உச்சியில் ஒரு குட்டிப் பிசாசு உட்கார்ந்திருந்தது. அதனைப் பார்த்த குட்டப்பனுக்கு மனதில் பயம் எழுந்தது. எனினும் அதனை மறைத்துக் கொண்டு, ''ஏய் குட்டிப் பிசாசே, உனக்கு என்ன வேண்டும்? ஏன் இந்த மரத்தை வெட்டக் கூடாது என்கிறாய்?'' என்று கேட்டான்.

குட்டிப்பிசாசு, ''குட்டப்பா, நான் இந்த மரத்தில் நெடு நாட்களாக வாழ்ந்து வருகிறேன். எனவே, என்னால் இந்த மரத்தை விட்டுச்


செல்ல இயலாது. எனவே, நீ வேறொரு மரத்தை வெட்டிக் கொள்'' என்றது.

அதற்கு குட்டப்பன், ''குட்டிப்பிசாசே! இங்கு இருப்பதிலேயே இதுதான் நல்ல மரமாக இருக்கிறது. எனவே, இதனை வெட்டுவதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை'' என்றான்.

உடனே குட்டிப்பிசாசு, ''குட்டப்பா! இந்த மரத்தை விட்டுவிடு. அதற்கு பதில் நான் உனக்கு தங்கக் காசுகள் தரும் கூஜாவைத் தருகிறேன். அதனை வைத்துக் கொண்டு நீ மகிழ்ச்சியாக வாழலாம்'' என்றது.

''உண்மையாகவா!'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டான் குட்டப்பன்.

''இந்த மரத்தின் அடியில் இருக்கும் ஒரு பொந்தில் இரு கூஜாக்கள் இருக்கின்றன. முதலாவது கூஜாவை நீ எடுத்துக் கொண்டு, தினந்தோறும் சேவல் கூவியவுடன் அதனைத் திறந்து பார்த்தால் இரண்டு



பொற்காசுகள் இருக்கும். நீ மகிழ்ச்சியாக வாழலாம். மாறாக இரண்டாவது கூஜாவை நீ எடுத்துக் கொண்டால், அது உனக்கு ஒரே ஒருதடவைதான் பயன் தரும். ஆனால், நீ முதல் தடவை எவ்வளவு பொற்காசுகள் கேட்கிறாயோ அவ்வளவு பொற்காசுகள் உனக்கு முதல் தடவையிலேயே கிடைத்துவிடும். நீயும் ஒரே நாளில் கோடீஸ்வரனாகி விடலாம். ஆனால், நீ இரண்டில் ஏதேனும் ஒரு கூஜாவை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்'' என்று குட்டப்பனிடம் குட்டிப்பிசாசு கூறிவிட்டு அங்கிருந்து மறைந்தது.

குட்டப்பன், 'தனக்கு முதல் கூஜாவே போதுமானது' என்று கூறி, அதனை எடுத்துக் கொண்டான். தன் மனைவியிடம் காட்டி நடந்ததைக் கூறினான்.

குட்டப்பன் மனைவி ஆச்சர்யத்துடன் அடுத்த நாள் காலை சேவல் கூவியவுடன் அந்தக் கூஜாவைத் திறந்து பார்த்தாள். குட்டப்பன் கூறியதைப் போலவே அதில் இரண்டு பொற்காசுகள் இருந்தன.

பொற்காசுகளைப் பார்த்த குட்டப்பன் மனைவிக்குப் பேராசை அதிகமாகியது. 'தினந்தோறும் இரண்டு பொற்காசுகளுக்காக காத்திருப்பதற்கு பதில், இரண்டாவது கூஜாவை எடுத்திருந்தால் ஒரே நாளில் கோடீஸ்வரர்களாகி இருக்கலாமே!' என்று நினைத்தாள்.

அடுத்த நாள் காலை இரண்டாவது கூஜாவைப் பெறுவதற்காக, குட்டப்பன் மனைவி கோடாரியை எடுத்துக் கொண்டு, குட்டிப்பிசாசு வசித்த அதே மரத்தை அடைந்தாள். மரத்தை வெட்ட கோடாரியை ஓங்கினாள். அப்போது அந்த மரத்தில் இருந்த குட்டிப்பிசாசு குட்டப்பனிடம் கூறியதைப் போலவே, ''இந்த மரத்தை வெட்டாதே. அதற்குப் பதில் தங்கக் காசுகள் தரும் கூஜாவை உனக்குத் தருகிறேன். அதை வைத்துக் கொண்டு நீ மகிழ்ச்சியாக வாழலாம்'' என்று அவனது மனைவியிடம் கூறியது. மேலும் அதனை உபயோகிக்

இவர்தான் அந்தப் பிரபலம்!



சார்லி சாப்ளின்

தொகுப்பு: ஜி.எஸ்.எஸ்

கும் முறையைக் கூறிய குட்டிப்பிசாசு அவ்விடத்தில் இருந்து மறைந்தது.

மரத்தின் பொந்தில் இரு கூஜாக்களைப் பார்த்த குட்டப்பனின் மனைவிக்குப் பேராசை அதிகமாகியது. எனவே, இரு கூஜாக்களையும் எடுத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

மறுநாள் காலை சேவல் கூவியவுடன், தான் எடுத்துக் கொண்டு வந்த கூஜாக்களில் முதலாவது கூஜாவை ஆசையுடன் திறந்து பார்த்தவளுக்கு அதிர்ச்சி. ஏனெனில் அதில் அவள் எதிர்பார்த்தது போல் பொற்காசுகள் ஏதும் இல்லை.


முதல் கூஜாவில் பொற்காசுகள் ஏதும் இல்லாததால் ஏமாற்றத்துடன் இரண்டாவது கூஜாவைத் திறந்து பார்த்தவளுக்கு மீண்டும் அதிர்ச்சி. ஏனெனில் அதிலும் பொற்காசுகள் இல்லை.

'குட்டிப்பிசாசு கூறியதைப் போல் ஏதேனும் ஒரு கூஜாவை மட்டும் எடுத்துக் கொண்டு வராமல், இரண்டு கூஜாக்களையும் எடுத்துக் கொண்டு வந்ததால்தான் பொற்காசுகள் ஏதும் கிடைக்கவில்லை' என்பதை குட்டப்பனின் மனைவி உணர்ந்தாள்.

'நாம் எடுத்துக் கொண்டு வந்த கூஜாக்கள்தான் பொற்காசுகள் தரவில்லை. தமது கணவர் எடுத்துக் கொண்டு வந்த கூஜாவிலாவது பொற்காசுகள் பெறலாம்' என்று அதனைத் திறந்து பார்த்தாள். நேற்று இரு பொற்காசுகள் தந்த கூஜா இன்று ஒரு பொற்காசு கூடத் தரவில்லை!

ஓவியப் போட்டி

சிவப்புக் கண்களை உருட்டியபடி துள்ளி ஓடும் முயல்களைப் பார்த்திருப்பீர்கள். இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: முயல்கள். முயல்கள் புல்வெளியில் அமர்ந்திருக்கலாம்; கேரட் சாப்பிடலாம்; துள்ளி ஓடலாம்; கூட்டமாக வசிக்கலாம்... இப்படி எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.



கடைசித் தேதி:
10.05.2005



போருக்கு

ஒரு நாட்டை ஆண்ட ராணி, தனது ஆட்சிக் காலத்தில் ஒரு தரம் கூட அந்த நாட்டில் அடி எடுத்து வைக்கவில்லை என்றால் நம்ப முடிகிறதா? போலந்து நாட்டில் அப்படி நடந்திருக்கிறது. 1697ல் இருந்து 1727வரை, முப்பது ஆண்டுக் காலத்துக்கு அந்த நாட்டை ஆண்டவர் கிரிஸ்டியேன் எபர் ஹார்பைன் என்ற ராணியார். அவர் அந்த முப்பது ஆண்டுக் காலத்தில் ஒரு தரம்கூட தம் ஆட்சியின் கீழுள்ள போலந்தை எட்டிப் பார்த்ததில்லையாம்! வெளி நாட்டிலிருந்தே ஆட்சி செய்தார்.

ஜஹாங்கீர் தன் மனைவி ஆக்ராவில் இருந்தபோது தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்ற செய்தியை உடனே தெரியவேண்டி ஆக்ராவிலிருந்து டில்லி வரை சிவப்பும் பச்சையுமான கொடிகளை ஏந்திய பணியாட்களை நியமித்தார். ஆண் குழந்தை என்றால் சிவப்புக் கொடியையும் பெண் குழந்தை என்றால் பச்சைக் கொடியையும் காட்ட வேண்டும் என்று ஆணையிட்டு, குறைந்த நேரத்தில் செய்தியைப் பெற்று இருக்கிறார்.

ஃபிரான்செல்டான் என்பவர் பிரான்ஸைச் சேர்ந்த பெரும் பணக்காரர். இவர் ஃபிரஞ்சுச் சிறையில் 69 ஆண்டுகள் அடைபட்டுக் கிடந்தார். இவர் செய்த குற்றம் 14ஆம் லூயி மன்னனின் வழுக்கைத் தலையைப் பார்த்துச் சிரித்தது!

மிக



சென்ற குழந்தை!

இளம் வயதில் படைத்தலைவராயிருந்தவர் டியூக் கோட்வார்ட் என்ற பெல்ஜிய நாட்டு மன்னரே. இவர் பிறந்த 90-வது நாளில் இவர் தந்தை இறக்கவே இவர் பதவியேற்றார். இக் குழந்தை மன்னர் பட்டத்துக்கு வந்ததும் எதிரிகள் பெல்ஜிய நாட்டின் மீது போர் தொடுத்தார்கள். கடுமையான போர் தொடங்கிற்று. மூன்று வயதே நிரம்பிய இக் குழந்தையைத், தொட்டில் ஒன்றில் கிடத்திப் போர்க்களத்துக்குத் தூக்கிச் சென்றார்கள். இக்குழந்தை மன்னர் தொட்டிலில் படுத்தபடியே போரை மேற்பார்வையிட்டார். போரில் பெல்ஜியமே வெற்றி பெற்றது. டியூக் கோட்வார்ட் 48 ஆண்டுகள் ஆட்சி புரிந்து 'மிகத் தைரிய சாலியான மன்னர்' என்ற பெயரையும் பெற்றார்.



புகழ்பெற்ற வான சாஸ்திர விஞ்ஞானிகளுள் ஒருவர் டைகோபிராக். இவரது பெயர் நிலவில் உள்ள ஒரு மிகப் பெரிய எரிமலைக்கு வைக்கப்பட்டுள்ளது. ஒரு சமயம் கத்திச் சண்டையின்போது இவர் தன் மூக்கை இழந்தார். டென்மார்க் அரசர் மனம் இரங்கி, தங்கத்தால் இவருக்கு மூக்கைப் போன்ற அமைப்பை, உருவாக்கித் தரும்படி உத்தரவிட்டார். அதன்படி முகத்தில் இறுகப் பற்றிக் கொள்ளும் விதத்தில் தங்கத் தகட்டில் ஒரு மூக்கு செய்து இவருக்குப் பொருத்தப்பட்டது. தாம் இறக்கும்வரை மிகுந்த பெருமையுடன் இந்தத் தங்க மூக்கையும் இவர் அணிந்து கொண்டார்.

- என். ஜரினா பானு,
திருப்பட்டினம்

மண்டேலா வரலாறு!



உலக எழுத்துச் சிற்பிகளைக் கண்டுபிடியுங்கள், மு. அப்பாஸ் மந்திரி, ரூபாய் நாற்பது, மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் தெரு, சென்னை - 17.

குறுக்கெழுத்துப் புதிர்களைக் கொண்ட அருமையான தொகுப்பு இது. வெறும் புதிர்களாக இல்லாது இதற்குள்ளேயே எழுத்தமைப்பைக் கொண்டு எழுத்துலகத்தின் பெயர் பெற்ற படைப்பாளிகளின் பெயர்களைத் தொகுத்துக் கூறுகின்றன.


ஆப்பிரிக்கக் காந்தி நெல்சன் மண்டேலா, இராம.சுந்தரம், பக் 128, முப்பத்திரண்டு ரூபாய், மணிமேகலைப் பிரசுரம், 7. தணிகாசலம் தெரு, சென்னை - 17.

ஆப்பிரிக்க மக்களின் விடுதலைக்காக இருபது ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறைவாசத்தை அனுபவித்த நெல்சன் மண்டேலாவின் தியாகம் மிக்க வரலாறு. சிறுவர் உலகம் அவசியம் அறிந்து கொள்ள வேண்டியது.


விலங்கினங்களைப் பற்றிய வியத்தகு செய்திகள், இராம. சுந்தரம், பக். 88, நாற்பத்தைந்து ரூபாய், மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

முயலின் வியர்வைச் சுரப்பிகள் எங்கே அமைந்திருக்கிறது தெரியுமா? கால்களுக்கடியில். குரங்குகள் பாம்பைக் கண்டால் பயப்படுமாம்! கம்பளிப் பூச்சி மரங்களுக்கு அடிப்பாகத்திலும் இலைகளுக்கு அடியிலும் மறைந்திருப்பது ஏன் தெரியுமா? பறவைகளின் கண்ணில் படாது மறைந்திருக்கவே! இம்மாதிரி விலங்குகளைப் பற்றி எவ்வளவோ சுவையான அறிவியல் செய்திகளை இந்த நூல் தருகிறது. அவசியம் படித்துப் பயன் பெற வேண்டிய நூல்.

\- ரே



Extra Special Treat for POTTER FANS!



Exciting Stories
Picture Stories
Plus
Regular Features!

An Issue You
Just Can't Miss!
Book Your Copy Today!

GOKULAM


The magazine for children

For Subscriptions mail to : Gokulam, Kalki Buildings,
47- NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai-600 032
E-mail:subscription@kalkiweekly.com

JUNE 2005 Rs.8/- only



மே மாதம் 'குருவிகள்' என்ற தலைப்பில் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற குருவிகள் இங்கே...



முதல் பரிசு: அ. ப்ரீத்திகா,
ஒன்பதாம் வகுப்பு, அல்வேனியா மெட்ரிக் பள்ளி, இராமநாதபுரம்



இரண்டாம் பரிசு:
எஸ். அனிலா பானு,
எட்டாம் வகுப்பு,
பொன்ஜெஸ்லி பப்ளிக் மெட்ரிகுலேஷன் பள்ளி,
நெய்வேலி



மூன்றாம் பரிசு: எஸ். ஸ்ரீவித்யா,
நகர மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்



ஆறுதல் பரிசு:
எஸ். நெமிம் சஹாய்,
அம்மாபேட்டை



ஆறுதல் பரிசு:
எம். ஸ்ரீவித்யா,
பத்தாம் வகுப்பு,
டவுன்
உயர்நிலைப் பள்ள
கும்பகோணம்

“கைகளே என் பலம்!”

மூன்றாவது படிக்கும் சரண்யாவை முதன்முறையாக பார்க்கும்பொழுது 'மம்முதராசா' பாடும் இன்னொரு சுட்டிப் பெண்ணாகத்தான் தெரிகிறார். ஆனால் அமெரிக்காவில் வரும் ஆகஸ்ட் மாதம் நடக்கும் உலக சாம்பியன்ஷிப் கராத்தே போட்டியில் இந்தியா சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஒரே பெண் இவர்தான்!





கோடை விடுமுறையிலும் கராத்தே பயிற்சிக்காக தன் சந்தோஷ நிமிடங்களைச் செலவழித்துக் கொண்டிருந்த சரண்யா மின்னல் தெறிக்கும் விழிகளோடும் மழலை மொழியிலும் நம்மிடம் பேசினார்.

கராத்தே ஆர்வம் மலர்ந்ததெப்படி?

பெண்கள்னா எப்பவும் பாதுகாப்போடு இருக்கணும்னு நினைச்சுதான் எங்க அப்பா, அம்மா என்னை மூணு வயசுலேயே கராத்தே கத்துக்க அனுப்பினாங்க. முதல்ல

ஹுசைனி சார்கிட்டதான் கத்துக்க ஆரம்பிச்சேன். ஆனா என்னால தினமும் அபிராமபுரத்திலிருந்து பெசன்ட் நகர் வரைக்கும் போக முடியலை. அதனால் எங்க ஏரியாவிலிருக்கிற சுந்தர் சார்கிட்ட பயிற்சி எடுத்துக்கிட்டேன். மளமளன்னு எல்லா பெல்ட்டும் வாங்கி இறுதியா ஏழு வயசுல ப்ளாக் பெல்ட் வாங்கி சாதனை படைச்சேன்!

ப்ளாக் பெல்ட்... ரொம்ப கஷ்டமாச்சே?

ம்...அதுல 'மராத்தான் வாக்கிங்' என்று ஒரு டெஸ்ட் உண்டு. 26 கி.மீ ஜாகிங் மாதிரி போகணும். அடையார் போட் கிளப்பிலிருந்து காலையில 2 மணிக்கு கிளம்பி பாரிமுனை வரை போய் காலை ஆறு மணிக்கு மீண்டும் கிளம்பிய இடத்துக்கே வந்தேன். கடவுள் அருளால இதுமாதிரியான கடுமையான பயிற்சிகள், டெஸ்ட்டுகள் இதெல்லாம் தாண்டி ப்ளாக் பெல்ட் வாங்கினேன்.



''கோபால்... எதுவரையும் நீ படிக்கணும்னு ஆசைப்படறே?''
''பெல் அடிக்கறவரைக்கும் சார்!'' - பாரதி

பிஞ்சு கைகளால் செங்கல்களை எப்படி உடைக்க முடியுது?

கராத்தேவுக்கு உடல் பலமும் மன வலிமையும் முக்கியம். எனக்கு என் கைகளே பலம். எந்தப் பயிற்சியுமில்லாமதான் நான்கு செங்கல்களையும் ஒரே நேரத்தில் உடைச்சேன். இதெல்லாம் ரொம்ப ஆர்வமா பண்ணுவேன் நான்.

அமெரிக்கா பறக்கப் போறீங்களாமே? வாழ்த்துகள்!

சமீபத்துல பூனாவுல நடந்த நேஷனல் கராத்தே சாம்பியன்ஷிப்புல நான் 14 வயதுக்குரியவர்களுக்கான கதா (kata), குபுடோ (kubudo) பிரிவுகள்ல கோல்டு வாங்கினேன். ஆரம்பத்துல ஏதோ கேலிப் பொருளா என்னைப் பார்த்தவங்க, நான் ஜெயிச்ச பிறகு ஆச்சர்யம் தாங்காம அழுதுட்டாங்க.

இந்தச் சாதனையைப் பார்த்துதான் யு.எஸ்.ல நடக்கிற உலக சாம்பியன்ஷிப்புக்கு என்னைத் தேர்ந்தெடுத்திருக்காங்க. அதுக்கான செலவுகள் அதிகமா இருக்கிறதால ஸ்பான்ஸர்ஷிப்பை எதிர்பார்த்திட்டிருக்கேன்.



படிப்பு, பொழுதுபோக்கு எல்லாம் எப்படி?


மைலாப்பூர், பி.எஸ். ஸ்கூலின் ப்ரைட் ஸ்டூடன்ஸ்ல நானும் ஒருத்தி. டீ.வியில ஓடுற எல்லா புது சீரியல் பாட்டையும் அப்படியே பாடுவேன் தெரியுமா? என் தம்பி சஷாங்கும் கராத்தே ப்ளேயர்தான். அவன் சினிமா பாட்டுக்கு சூப்பரா ஆடறதைப் பார்க்கறது என்னோட மெயின் பொழுதுபோக்கு.





- ச.ந. கண்ணன்


சுதந்திரம்!

கதை: ரவிவர்மன்
படம்: சேகர்

 பட்டு  கிட்டு  தாமரைக் குளம்  பூக்குளம்




 மீன்கள்  வலை  மீனவன்

,  இருவரும் நண்பர்கள்.   திலும்  திலும் வாழ்ந்து வந்தன.  தில் வாழ்ந்து வந்த ,  வைப் பார்க்கச் சென்றது. "என்ன , நீ இந்தப் தில் வாழறே? என்  எவ்வளவு பெரிசு தெரியுமா? நீ என்னுடன் வந்துவிடு" என்றது.

,  இரண்டும்  க்குச் சென்றன. அங்கு இரண்டும் துள்ளிக் குதித்து, மகிழ்ச்சியாக விளையாடிக் கொண்டிருந்தன. அப்போது, அங்கு வந்த  "குளத்தில் நிறைய , இருக்கின்றன; நாளை  எடுத்து வந்து களைப் பிடித்துச் செல்ல வேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அதனைக் கேட்ட  பயந்தது. "என்ன , நாளை நம்மை  பிடிக்கப் போகிறானாமே, உனக்குப் பயமாக இல்லையா?" என்றது.

"எனக்கும் பயமாகத்தான் இருக்கிறது. நாம் பயந்தால் இவ்வளவு அழகான குளத்தில் வாழ முடியுமா?" என்றது 

அதற்கு ", இவ்வளவு அழகான ல் எப்போதும் உயிருக்குப் பயந்து வாழ்வதைவிட, என் ல் மிகவும் மகிழ்ச்சியாக, சுதந்திரமாக வாழ்வதே மேல். முடிந்தால் நீயும் என்னுடன் வந்து சேர்" என்று கூறிவிட்டுச் சென்றது 


10 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்!





விடைகள்: 1. மிக்கி கிளவுஸ், 2. மிக்கி சட்டை பட்டன், 3. மின்னி பட்டன், 4. மின்னியின் இலைத் தண்டு, 5. மின்னியின் ஷூ நாடா, 6. தவளையின் காது, 7. தாமரை இலை, 8. பூக்கள், 9. தரையில் நீர், 10. மரம்

வண்ணம் தீட்டுங்கள்!



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka